3797

# செந்தமிழ்

தொகுதி—73 மார்ச் 1979 பகுதி—1

## மதுரைத் தமிழ்ச் சங்க இதழ்

ஆசிரியர் :

டி. பி. எம். பெரியசுவாமி, எம். எல். ஏ.,

## "செந்தமிழ்" ஆசிரியர் குழு

பேராசிரியர் டாக்டர். சுப. அண்ணாமலை, எம்.ஏ., பி.எச்டி.,
முதல்வர், தியாகராசர் கல்லூரி, மதுரை-625009.

பேராசிரியர் டாக்டர். கோ.விஜயவேணுகோபாலன், எம்.ஏ.,பி.எச்டி.,
மதுரைப் பல்கலைக் கழகம், மதுரை-625021.

பேராசிரியர் பழனி. அரங்கசாமி, எம்.ஏ., பி.ஓ.எல்.,
அஞ்சல்வழிக் கல்வித்துறை, மதுரைப் பல்கலைக்கழகம்,
மதுரை.625021.

உரையாசிரியர் புலவர். இரா. இளங்குமரன், தமிழாசிரியர்,
மு. மு. உயர்நிலைப்பள்ளி, திருநகர், மதுரை-625006.

---

ஆசிரியரும், வெளியிடுபவரும் :

**டி. பி. எம். பெரியசுவாமி, எம். எல். ஏ.,**
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம்,
மதுரை - 625001.

---

முகவரி :

**ஆசிரியர்,**
"செந்தமிழ்"
மதுரைத் தமிழ்ச் சங்கம்,
54, தமிழ்ச் சங்கச்சாலை,
மதுரை – 1.

# மறைவு

சங்கத் தலைவர் மாட்சிமை தங்கிய இராமநாதபுரத்தரசர்

## ஆர். எஸ். இராமநாத சேதுபதி

அவர்கள்



தோற்றம்
22-6-1935

மறைவு
12-4-1979

கொடையாளர் ! இன்சொல்லர் !! காட்சிக்கு எளியர் !!!

வேந்தர்க்கு ஒளியாம் — எம் கோ

மறைவினால் வருந்துகின்றோம்.

# " கண்ணீர்ப் பா "

காலமெல்லாம் இறைத்தொண்டு
களிப்புடனே செய்திட்டாய்!
கலைவ ளர்த்தே
ஞாலமெல்லாம் போற்றிடவே
நற்பணிகள் பலசெய்த
சேது மன்னா;

ஆலம்போல் நீஇருந்தாய்
ஆயிரமாய் உந்நிழலில்
யாமி ருந்தோம்!
காலனவன் விண்ணவர்க்காய்
உன்நிழலைக் கவர்ந்தானோ?
சென்ற தெங்கே? (1)

'இலை'என்று வந்தோர்க்கே
இலைபோட்டு உணவூட்டி
ஏழ்மை போக்கும்
கலைகற்று எம்மவரின்
கவலையெலாம் மாற்றுகின்ற
சேது மன்னா!

மலைபோல பகைவரினும்
மனமஞ்சி வாழாமல்
மானம் போற்றும்
நிலையான பரம்பரையின்
தன்மானச் சுடர்விளக்கே
அணைந்தா யோநீ! (2)

மணித்தமிழைக் காப்பதற்காய்
மனமுவந்து மதுரைநகர்
தமிழ்ச்சங் கத்தின்
தனித்தலைவன் நீயானாய்
தஞ்சமென உனையடைந்தோம்
சேது மன்னா!

கனிவுடனே தமிழ்வளர்க்கக்
கருதியதைக் கேளுங்கள்
தருவேன் என்றாய்!
இனியாரை யாம்கேட்போம்
இனித்தமிழைக் காப்பதற்காய்
யாரே உள்ளார்? (3)

கரும்பினிக்கும் அதைவிடவே
கற்கண்டு தான்இனிக்கும்
என்போர் நின்றன்
அருள்நிறைந்த மொழியதனை
அருந்தினரா? இல்லையில்லை!
சேது மன்னா!

திருத்தமுற நின்வாயின்
தீந்தமிழைக் கேட்டாலே
தேனும் என்ன
கருபென்ன கற்கண்டு
தானுமென்ன அவையெல்லாம்
கசக்கு மன்றோ! (4)

எப்பாலும் உன்புகழை
இசைத்திடவே தான்வேண்டி
எளிமை கொண்டாய்!
முப்பாலின் வழிநடந்தாய்
முப்பாலா நீஇறந்தாய்?
சேது மன்னா!

தப்பாமல் தமிழ்வளரத்
தயங்காமல் தன்பொருளைத்
தருவேன் என்றாய்
எப்போது நீ வருவாய்
ஏங்குகின்றோம் உன்பிரிவால்
எழுந்து வாராய் (5)

கலையானாய்! எம்நெஞ்சில்
கரையாத சிலையானாய்!
தமிழகத்தின்
தலையானாய்! நிலையானாய்
தனியானாய்! மணியானாய்!
தமிழு மானாய்!

வளையாத சேதுபதி
வள்ளல் இராமநாத!
வஞ்சக் காலன்
வலையினிலே அகப்பட்டே
வழங்குமொழி இல்லாமல்
சென்றதெங்கே? (6)

பயன்மரமாய் ஊர்நடுவே
பசுமையுடன் நீஇருந்தாய்
பழங்கள் கொண்டே!
அயலிருந்தோர் மற்றுந்தான்
அருகிருந்தோர் அனைவருமே
மன்னா! உன்றன்

நயன்மிகுந்த நல்லன்பால்
நல்குரவு தனைநீங்கி
நடுக்கம் இன்றி
உயர்ந்தோமே! இல்லாமை
உயர்த்தினாய் நீ! இந்நாளில்
எங்கே சென்றாய்? (7)

நல்லோர்க்கு நலமளித்தாய்
அல்லோர்க்கு அறிவளித்தாய்
நாளும் தானே
எல்லோரும் இன்புறவே
இறைவனையே தொழுதவனே
மன்னா! இந்நாள்

பல்லோரும் சிறப்புற்றோம்
பார்க்கின்ற விழிபெற்றோம்
உன்னைப் பார்க்க
இல்லைநீ என்றாலே
என்செய்வோம்? எங்குய்வோம்?
இளைந்தே சாவோம்! (8)

தாழ்வகற்றி எமக்கெல்லாம்
தமிழளித்தாய்! தமிழளிக்கும்
நிலைய ளித்தாய்!
வாழ்வளித்தாய்! வளமளித்தாய்!
வற்றாத கருணைநீ
சேது மன்னா!

ஊழ்வினையால் உறங்கிஎழா
உறக்கத்தைக் கண்டாயோ!
எங்கள் கண்கள்
ஆழ்கடல்நீர் கொண்டனவோ
அவலத்தில் ஆழ்கின்றோம்
அழுகின் றோமே!

தென்பொதியத் தென்றலென
திங்களென நீயிருந்தாய்
குளிர்ச்சி தந்தாய்!
விண்ணுலகின் கார்முகிலாய்
வியனிலத்தில் பொருளீந்த
சேது மன்னா!

வெண்மேகம் கடல்நீரை
விரைந்துண்டு கருக்கொள்ளும்
நீயும் எம்மின்
கண்ணீரைக் கண்டிடுவாய்
கசிந்துண்டு கருக்கொள்வாய்!
தவழ்ந்து வாராய்!

க. செயமூர்த்தி,
துணைப் பேராசிரியர்,
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

# உள்ளுரை


| எண் | பொருள் | பக்கம் |
| --- | --- | --- |
| 1. | பண்டைக்கால மக்கள்<br>கவிராச பண்டித இராமசுப்பிரமணிய நாவலர் | 1 |
| 2. | 'இன்' எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி<br>ஏ. ஆதித்தன் | 17 |
| 3. | காலத்தின் கோலம்<br>புலவர். சி. இராமசாமி | 20 |
| 4. | திருவள்ளுவர் தமிழ் எழுத்துகளில் எழுதிய திருக்குறள்<br>புலவர். தாமரைக் கண்ணன் | 25 |
| 5. | வர்ணனை மரபுகள்<br>எஸ். வையாபுரிப் பிள்ளை, பி.ஏ. பி.எல். | 27 |
| 6. | அன்பின் ஆற்றல்<br>பழனி. அரங்கசாமி, எம்.ஏ. பி.ஓ.எல். | 33 |
| 7. | சேது மன்னரின் செந்தமிழ்த் திறம் | 38 |
| 8. | செய்திக்கதிர் | 38 |

## பண்டைக்கால மக்கள்

கவிராசபண்டித இராமசுப்பிரமணிய நாவலர்,
நாகர்கோவில்.

உலகம் முதலும் முடிவும் இல்லாதது என்பது சிலர் கொள்கை. அஃது அழியும் தன்மை உடையது என்பது வேறு சிலர் கொள்கை. உலகின் பருவடிவம் அழியினும் நுண்ணியதோர் வடிவில் அடங்கி நின்றுமேலும் காரண காரியமுறைக்கு இயைய விரியும் இயல்புடையது என்பதை உட்கொண்டு ஆராயின், அது அழியா இயல்புடையது-முடிவில்லாதது-என்பதும், உலகத்துப்பொருள்கள்வைகலும் வேறுபாடு அடைந்து தம் பருவடிவங்கள் அழியப்பெறுவதை உட்கொண்டு ஆராயின் அது அழிவுடையது என்பதும் பொருத்தமுடையனவாகவே காணப்படுகின்றன. உலகின் திரிபியல்பை நோக்கி 'உலகம்மாயை. நிலையாத தோற்றம் உடையது'-என்பதும் கருத்துவகையால் ஒப்புக் கொள்ளத்தக்கதாம். மேற்கூறிய இரு கருத்துக்களும் கூறுவார் கருத்துவகையால் உண்மையாகக் கொள்ளப்படுவன ஆகலின், அவை பற்றிய சமய வழக்குகள் புறக்கணிக்கத்தக்கன.

உலகத்து உயிர்கள் எவ்வாறு உண்டாயின என்னும் வினாவிற்கு ஒருதலைப்பட்ட விடை இறுகாறும் தரப்படவில்லை. சமயக் கருத்துக்கள் பெரும்பாலும் குறிப்பிட்ட குழுவினருடைய கொள்கைகளும் நம்பிக்கைகளும் செய்கையிற் காட்டலாகா ஆராய்ச்சி முடிவுகளுமாக இருப்பதனால், அவை உண்மையானவை என்று எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படுவன அல்ல. விஞ்ஞானிகளிலும் பலர் பற்பல கருத்துக்களை உடையவராகக் காணப்படுகின்றனர். அணுக்கள் செறிந்து உயிர்களுக்கு உரிய உடம்புகள் உண்டாயின என்பது சிலருடைய கொள்கை. உடம்புகள் முழுமையாகவே உண்டாயின என்பது வேறு சிலர் கொள்கை. இக் கொள்கைகளும் ஆராய்ச்சிக் கொள்கை (Research Theory) நிலையில் நிகழ்வதன்றிச் செய்கை நிலையில் நிகழும் என்பது அண்மையில் எதிர் நோக்கப்படுவன அல்ல. ஆகவே, இப்போதைய உயிரினங்களின் இதுகாறுந் தொடர்ந்துவரும் வாழ்க்கைக்கு அடிப்படையாக இருந்த காலத்தையே நாம் இங்குப் பண்டைக் காலம் என்று குறிப்பிட்டிருக்கிறோம். அதன் முன் நிகழ்ந்த படைப்புச் சுழற்சிகளைக் கருதுவதாயின், பண்டைக் காலம் என்பது நமது உள்ளத்தால் கருதப்படாத ஒன்றாகவே தோன்றும். ஒவ்வொரு படைப்பின் (Generation) தொடக்கமும் நிகழ்ச்சியும் அவ்வக் கால வாய்ப்புக்கு ஏற்பச் சிறிது வேறுபடுமாயினும் உயிர் வாழ்க்கையின் பொதுப்பான்மைகள் படைப்புக்கள் எல்லாவற்றிலும் பெரும்பாலும் ஒத்து நிகழும்.

பறவை, விலங்கு முதலிய உயிரினங்களின் வாழ்க்கையியல்பு அவற்றின் தோற்றக் காலம் தொட்டே ஒருபடித்தாக இருந்துவருகின்றது என்பது யாவர்க்கும் ஒப்ப முடிந்தது. மக்களுடைய வாழ்க்கையியல்பு காலந்தொறும் பல வேறுபாடுகளையும் எய்தி வருவதற்கு அவர்களது பகுத்தறிவும் உடலமைதியும் முதன்மையான காரணங்கள் ஆகும்.

எண் இகந்த ஆண்டுகளுக்கு முன்பே உலகில் மக்கள் தோன்றித் தம் வாழ்க்கையை நிகழ்த்த முயன்றிருக்கின்றார்கள். மக்கள் தோன்றி இத்துணை ஆண்டுகளே ஆயின என்னும் வரையறைக் கூற்று அறிஞர்களால் ஒருதலையாக மறுக்கப்பட்டுள்ளது. வரலாற்று நூல்களில் சொல்லப்படும் கற்காலம் என்பது மக்கள் வாழ்க்கையில் ஒரு பிற்காலமேயாம் என்று சொல்லத்தக்க அளவில் மக்களது தோற்றம் தொன்மை உடையது மக்கள் இன்ன தன்மையான இடங்களில் தோன்றியிருக்க வேண்டும், இன்ன நிலப் பகுதியில் தோன்றியிருக்கவேண்டும் என்று வரையறுத்துக் கூறுவதும் வெறுங் கையால் அளந்து முழக்கணக்குக் கூறுவதையே ஒக்கும் உயிர்களின் உடற் பண்புகளையும் சூழ்நிலைகளையும் பொருத்தி ஆராய்வோமாயின், உயிர்கள் தாம் வாழ்வதற்குத் தகுதியான இடங்களிலேயே தோன்றியிருக்க வேண்டும் என்பது நன்கு புலனாகும். நிலவியல்பு உணவியல்பு தட்பவெப்பநிலை முதலியவை தம் வாழ்க்கைக்குப் பொருத்தம் உற்று நிகழும்பொழுதுதான் உயிர்கள் தோன்றவும் வாழவும் இயலும். இவ்வுண்மையை இன்றும் கண்டு வருகின்றோம். சூழ்நிலைகள் சிறிதும் பொருந்தாத இடங்களில் உயிர்கள் தோன்றா. வாழ்வதற்கு உரிய சூழ்நிலைகள் முற்றிலும் அமையாவிடில், தோன்றிய உயிர்கள் விரைவில் அழிந்துவிடும். சில உயிர்கள் முற்றிலும் அழிந்து விட்டன என்று உயிர் நூலார் சொல்லுகின்றனர். அவை முதன்மையான இரண்டு காரணங்களால் அழிந்திருக்கவேண்டும். ஒன்று, பிறவுயிர்கள் அவற்றை அழித்தல்; இரண்டு, வாழ்வதற்கு உரிய சூழ்நிலைகள் அமையப் பெறுமை.

வாழ்வதற்குரிய சூழ்நிலைகள் அமைந்தாலும் சில காரணங்களால் அவற்றில் வேறுபாடு நேரும்பொழுது உயிர்கள் அவற்றைத் திருத்தி அமைத்துக் கொள்ள முயல்கின்றன. உயிரினங்களின் எண் மிகும்போது உணவிலும் உறையுளிலும் பற்றுக்குறை நேருமாயின் அவற்றைப் போதிய அளவு பெறும் பொருட்டு உயிர்கள் முயல்வதையும் நாம் பார்க்கிறோம். இம்முயற்சிகளில் உயிர்கள் இயற்கையுடனும் பிற உயிரினங்களுடனும் போராட நேர்கின்றது. இனப்

பெருக்கத் தூண்டுதலைச் செயற்படுத்துவதிலும் இகல்கள் நேர்வது இயல்பாகும். நிலையியலுயிர்களுக்கு உரிய சூழ்நிலை இயற்கையால் பெரிதும் பேணப்படுகின்றது. இயங்கியலுயிர்கள் தமக்கு உரிய சூழ்நிலையைத் தத்தம் நிலைக்கு (பக்குவம்) ஏற்ப அமைத்துக்கொள்ளத் தக்கனவாக இருக்கின்றன. அறிவும் ஆற்றலும் குறைந்த உயிரினங்களுக்கு உரிய சூழ்நிலைகளும் இயற்கையால் அமைக்கப்படுகின்றன, அறிவு மிகுந்தோறும் இயற்கை ஆற்றும் உதவி குறைந்து வருவதை நாம் ஆராய்ந்து உணரலாகும். மக்கள் அறிவும் ஆற்றலும் மிகுந்தவராகையால் இயற்கையின் உதவி அவன்மாட்டுக் குறைந்து காணப்படுகின்றது. மக்கள் முன்னேற்றம் அடைவதற்கு இயற்கையின் உதவிக் குறைவு மிகச்சிறந்ததொரு காரணமாகும். மக்கள் தம் அறிவைப் பயன்படுத்திச் சீர்திருந்திய உறையுளையும் கருவிகளையும் அமைத்துக் கொள்கிருர்கள்; பலவகைக் கலைகளைப் பயின்று வாழ்க்கையை வளம்படுத்துகிருர்கள். இயற்கைத் தூண்டுதலால் வாழும் பறவைகள் தம்முடைய உறையுள் முதலியவற்றில் எத்தகைய சீர்திருத்தமும் பொருள் செய்யத்தக்க அளவில் பெற்றதில்லை. தாழ்ந்த பிற உயிரினங்களுக்கும் இஃது ஒக்கும். மக்களின் சீர்திருத்த வாழ்விற்குப் பகுத்தறிவு முதற் காரணமாக இருப்பினும், அவ்வறிவைப் பயன்படுத்துவதற்கு இயற்கையுதவிக் குறைவு ஒரு சிறந்த காரணம் ஆகும் என்பதில் ஐயம் இல்லை. உதவி மிகும் அளவில் மனிதனிடம் சோம்பலும் மிகுதல் இயல்பாகும்.

ஒருயிர் உடம்பொடு உலகில் தோன்றியதுவரை இயற்கையின் பாதுகாப்பு அமைந்துள்ளது. உயிர் தோன்றியபின் அது தன் வாழ்க்கையைப் பேணும் பொருட்டு, ''வாழவேண்டும்'' என்னும் விருப்பம் அதன்கண் இயல்பாகவே அமைக்கப்பட்டுள்ளது. இன்றளவும் நம் வாழ்க்கையை உய்த்துக்கொண்டு செல்வது அவ்விருப்பம்தான். உயிர்களிடத்தில் காணப்படும் இகல்கள் இவ்விருப்பத்தை நிறைவேற்றும் பொருட்டு நிகழ்வன, வாழ்க்கை அழிவை (இறப்பை)த் தடுக்கும் பொருட்டும் உயிர்கள் பலவாறு முயல்வதை நாம் கண்டு உணரலாகும். தமக்குரிய சூழ்நிலைகளை அமைத்துக் கொள்வதில் உயிர்கள் முயல்வதற்கு 'வாழவேண்டும்' என்னும் இவ்விருப்பமே காரணமாகும். மக்களது இன்றைய முன்னேற்ற நிலைக்கு அடித்தளம் இவ்விருப்பமே. இனப்பெருக்கத் தூண்டுதல் உயிரினங்களை வழிமுறை வாயிலாக (சக்கரவாரியாக) மேலும் வாழ்விக்குமாறு இயற்கையால் பிறவியுடன் அமைக்கப்பட்டதொருபண்பாகும். இயற்கைநெறிகள் மாறுபடும்போது இயற்கைப் பாதுகாப்பு முதலியன எல்லாம் பலவாறு தவறுபடுகின்றன.

உயிர் வாழ்க்கைக்கு உணவு இன்றியமையாததாக இருத்தலால் உயிர்கள் தோன்றுவதன்முன் அவற்றுக்குரிய உணவுப் பொருள் தோன்றியிருத்தல் வேண்டும் என்று கொள்வது பொருத்தமானது ஆகும். உணவு வகைகள் உப்புநீர் முதலிய இரசாயனப் பொருள்களும் அவை அடங்கிய நிலையியல் உயிர்ப் பொருள்களும் இயங்கியலுயிர்ப் பொருள்களுமாம். ஆகவே, உப்பு நீர் முதலியவற்றுல் வாழும் உயிரணுக்களும் அவற்றை உண்டு வாழும் கீழ்நிலை நிலையியலுயிர்களும் கீழ்நிலையுயிர்ப் பொருள்களை உண்டு வாழும் உயர்நிலை நிலையியலுயிர்களும் நிலையியலுயிர்ப் பொருள்களை உண்டு வாழும் கீழ்நிலை இயங்கியலுயிர்களும் அவ்விரண்டினையும் உண்டு வாழும் உயர்நிலை இயங்கியலுயிர்களும் முறையே தோன்றியிருக்க வேண்டும் என்று கொள்வது காரண காரிய நெறிப்பட்டது எனலாம். காசிப முனிவனுடைய மனைவியர் உயிர்களைப் படைத்ததாகக் கூறும் பௌராணிக வரலாறும் இவ்வுண்மையை வற்புறுத்துகின்றது. 'புல்லாகிப் பூடாகி' என வரும் திருவாசகமும் இவ்வுண்மையைக் கூறுவதே என்பது ஆராய்ச்சியால் நன்கு விளங்கும். எனவே, எல்லாவுயிர்களும் ஒரேகாலத்தே தோன்றின என்பது பொருத்தமற்றதாகவே காணப்படுகின்றது.

உயிர்கள் ஒருகாலத்தே தோன்றின என்பது போல அவை ஓரிடத்தே தோன்றின என்பதும் பொருத்தம் அற்ற கூற்று ஆகும். நீர் வாழ்வன ஊர்வன பறப்பன நடப்பன முதலிய உயிர்த் தொகுதிகள் பல காலக் கூறுகளில் பல இடங்களில் தோன்றின என்று கொள்வதே ஆராய்ச்சிக்குப் பொருந்துவதாகத் தோன்றுகின்றது. உலகத்துக் குறிப்பிட்ட ஓர் நீர்நிலையில் தோன்றிய மீன் முதலிய உயிர்களே உலகு எங்கணும் பரவின என்று கூறுவது தோற்றவியல்புக்கும் வாழ்க்கையியல்புக்கும் பொருந்துவதாகக் காணப்படவில்லை. ஆகவே, மக்களும் ஒருகாலத்தே ஓரிடத்திலே தோன்றினார்கள் என்பது பொருத்தமில்லாத கூற்றாகவே தோன்றுகிறது. பலவேறு வகைப்பட்ட இடங்களில் காணப்படும் மக்கள் உடலமைப்பு நிறம் குரல் இயல் (குணம்) உணவு முதலியவற்றில் சிறிது சிறிது வேறுபட்டுக் காணப்படுவது, அவர்கள் வெவ்வேறுபட்ட இயற்கையை உடைய வெவ்வேறிடங்களில் தோன்றியவர்கள் என்பதை மேலும் தெளிவுறுத்தும். ஆயினும், மக்கள் வாழ்க்கைக்கு உரிய பொதுப் பான்மைகள் பெரிதும் ஒத்திருப்பதனால் பலவேறுபட்ட இடங்களில் தோன்றிய மக்கள் தமக்குப் பொருந்தும் சூழ்நிலைகளை உடைய ஒரு குறிப்பிட்ட இடத்தில் வாழ இயலும். உலகினை ஒன்றாக இணைக்கும் ஆற்றல் ஆறறிவு படைத்த மக்களிடையே சிறந்து காணப்படுகின்றது.

மக்களது தோற்றக் காலத்திலே அவரது வாழ்க்கைக்கு உரிய வாய்ப்புக்கள் எல்லாம் உலகில் நிரம்பியிருந்தன என்று கூறுவது பொருந்தாது. அரணிக்கட்டையால் நெருப்பு உண்டாக்கும் காலத்தின் பின்னரே மனிதன் நெருப்புக் கோலால் நெருப்பு உண்டாக்கக் கற்றுக் கொண்டான். அரணிக் கட்டையால் நெருப்பு உண்டாக்கக் கற்றுக் கொள்வதன் முன் பிறிதேதேனும் ஓராற்றல் மனிதன் நெருப்பு உண்டாக்கியிருத்தல் கூடும். மனிதன் நெருப்பு உண்டாக்கத் தெரிந்திராத காலமும் இருந்திருக்க வேண்டும் அன்றோ? இதனால் மனித இனத் தோற்றக் காலத்தில் மக்கள் மிகக் குறைந்த வாய்ப்புக்களை உடையவராக இருந்து மெல்ல மெல்ல வாய்ப்புக்களை மிகுதிப்படுத்திச் சீரிய வாழ்க்கையை மேற்கொண்டிருக்க வேண்டும் என்பது தெற்றெனப் புலனாகின்றது. மக்களுடைய இன்றைய வாழ்க்கை நிலை பண்டைக்கால மக்கள் கனவிலும் கண்டிருக்கலாகாததொரு தனிச் சிறப்பு உடையதாய் விளங்குகின்றது. மக்களது அறிவின் ஆற்றலும் இடையறாத முயற்சியும் தந்த பயனே இன்றைய வாழ்க்கை வடிவம்.

எல்லாவுயிர்களையும் போல மக்களும் முதன் முதல் வாழ்க்கைப் போரிலே ஈடுபட்டிருக்க வேண்டும். வாழ்க்கை நிகழ்த்துவதன் பொருட்டுச் செய்யப்படும் இகலே வாழ்க்கைப் போர் எனப்படும். உணவு, உறைவு, வேட்கை என்னும் மூன்றனையும் நிறைவேற்றும் பொருட்டு இன்னும் வாழ்க்கைப் போர் நிலவி வருகின்றது. அதன் திண்மையும் அளவும் சிறிது குறைந்துள்ளன என்றாலும் இக் காலத்து வாய்ப்புக்களை மிகுக்கும் பொருட்டு மக்கள் பேரழிவைத் தரும் பெரும் போர்களிலும் ஈடுபடுகின்றனர். அவை வரம்பு கடந்த பொறாமை, எல்லை கடந்த வேட்கை முதலியவற்றால் விளைவன ஆகையால், ஒரு தலையாக இயற்கையோடு மாறுபட்டவை. மக்கள் அன்று நிகழ்த்திய போர் வாழ்க்கையைச் செலுத்த இயலாத காலத்து எவ்வாற்றாலேனும் வாழ்க்கை நிகழ்த்தவேண்டும் என்ற எண்ணத்தால் தோன்றியது. வாழ்க்கைப் போரில், மக்கள் தம்மினத்து உயிர்களையும் பிறவினத்து உயிர்களையும் அழித்திருத்தலும் நிகழற்பாலதே. இது எல்லா உயிர்களுக்கும் ஒக்கும்.

மக்கள் தம் வாழ்க்கையை ஒருவாறு நிலைபெறச் செய்த பின்னரே தம் வாழ்க்கை நிலையை மேம்படுத்த முயலுதல் இயற்கை முறையாகும். ஆகவே உணவு, உறைவு வேட்கைகளை நன்கு அமைத்துக் கொள்ள முயன்ற பின்பே மக்களது உள்ளம் கலைகளை நினைவுற முடியும். இன்ன உணவு பொருந்துவது, இன்ன உணவு பொருந்தாதது என்று துய்த்தறிவு வாயிலாக மக்கள் உணர்வதற்கிடையே

நெடுங்காலம் சென்றிருக்கவேண்டும். துய்த்தறிதல் முயற்சியில் பிணியும் இறலியும் நேர்வதும் இயல்பேயாம். உறைவு வேட்கைகளிலும் மக்கள் ஒருவாறு சீர்திருந்திய நிலையை எய்துவதற்குப் போதிய காலம் வேண்டப்படும். மரக்கிளைகளிலும் முழைஞ்சுகளிலும் புதர்களிலும் ஆற்றங்கரைகளிலும் சோலைகளிலும் வாழ்ந்த பின்பே மக்கள் குடிசைகளை அமைத்திருக்க வேண்டும். தகுந்த உறைவிடம் வாய்க்கப் பெறுமல் பிறவுயிர்களால் மக்கள் பலர் அழிந்திருத்தலுங் கூடும். காலநிலை வேறுபாடுகளும் மக்களுக்கு ஓரளவில் அழிவைத் தந்திருக்கவேண்டும் இயற்கைத் தூண்டுதலாகிய வேட்கையை நிரப்புவதிலும் தந்நலம், பொருமை முதலிய காரணங்களால் மக்கட் கூட்டத்தில் ஓரளவு அழிவு தலைப்பட்டிருக்கவேண்டும். மக்கள் இக்காலத்துக்கு ஏற்ற உரிமையையும் முறையையும் முற்றிலும் மேற்கொண்டிருந்திருப்பார்கள் என்று கருத இயலாது. சூழ்நிலை வாய்ப்பும் துய்த்தறிவின் முதிர்ச்சியும் எத்துணைக்கு வாய்க்குமோ அத்துணைக்குத்தான் மக்கள் ஒழுக்கத்தைப் பேணமுடியும். இது இயற்கை உண்மை. உலகியலொழுக்கம் என்பது அவ்வக்காலத்து வாழ்க்கை வாய்ப்புக்கு ஏற்ப நிகழ்வதொன்றேயாம். ஒரு காலத்துக்கு உரிய ஒழுக்கம் பிறிதொரு காலத்துக்குப் பொருந்துவதன்றுவதற்கும் வாழ்க்கை அமைதியே காரணமாகும். இயற்கையறிவும் துய்த்தறிவும் உயரிய நிலையில் அமைவது காறும் உலகியலொழுக்கங்கள் வேறுபட்டுக் கொண்டே வருவது இயல்பு. அவ்வறிவு முதிர்ந்த நிலைமையில் வரையறுக்கப்பட்ட ஒழுக்கநிலைகளும் கூடக் கொண்டுய்க்க முடியாத நிலைமை உண்டாகுங்காலைப் பிறழ்ச்சி எய்துவது இயல்பு. ஒரு ஒழுங்கின்மை என்று கருதப்பட்டது பிறிதொரு காலத்து ஒழுக்கம் என்றும், ஒரு காலத்து ஒழுக்கம் என்று கருதப்பட்டது பிறிதொரு காலத்து ஒழுங்கின்மை என்றும் கருதப்படுவதற்குக் காரணம் அவ்வக் காலத்து வாழ்க்கை நிலையே. ஆகவே உலகியலொழுக்கங்களுக்கு (ஆசாரங்களுக்கு) நன்மை தீமைகள் (பாவபுண்ணியங்கள்) கூறுவது முடிந்த பொருள் உடையதன்று. அவ்வொழுக்கங்கள் மக்களது வாழ்க்கை நிலையை அமைதியொடு செலுத்துவதற்குப் பெரிதும் பயன் தரும். பிறர்க்குத் துன்பம் விளைக்கும் களவு, கொலை முதலியன எக்காலத்துக்கும் பொருந்தாதன ஆகையால் அவை அவ்வப்போது ஆற்றலுடைய மக்களால் தடுக்கப்படும்.

இயற்கை மாறுபாடுகளும் பிறரால் வருந் துன்பங்களும் பிணிகளும் அமைதியான வாழ்க்கைக்கு இடையூறுகளாம். இயற்கை மாறுபாடுகளால் வருந் துன்பங்களை நீக்குவதன் பொருட்டு மக்கள் ஆடை

முதலிய உபகரணங்களைத் தேட முயன்றிருப்பர். ஓரிடம் தமக்கு ஒவ்வாவிடத்துத் தமக்குப் பொருத்தமான பிற இடங்களை மக்கள் நாடியிருக்கக் கூடும். பிறரால் வருந்துன்பங்களை நீக்கும் பொருட்டு அவர்கள் இடையிடை பலவகை இகல்களில் ஈடுபட்டிருத்தலும் வேண்டும். விலங்கினங்களால் வரும் இன்னல்களை ஒழிக்கக் கருதி அவர்கள் வேட்டையாடும் தொழில் மேற்கொண்டிருத்தல் கூடும் என்று கருதுவதும் மிகையாகாது. பரண்கட்டிவாழ்தல், மக்கள் விலங்கினங்களில் நின்றும் தம்மைக் காப்பாற்றும் பொருட்டு மேற்கொள்ளப்பட்டதே ஆகும். தமக்கு வரும் பிணிகளை வராமல் தடுப்பதற்கும், வந்தால் நீக்குவதற்கும் உரிய மருந்துகளைக் கண்டறிவதில் மக்கள் மிகுந்த முயற்சிகளை மேற்கொண்டிருக்கவேண்டும் என்பதும் உய்த்துணரற்பாலதே. உரிய மருந்துகளைக் காண்பது துய்த்தறிவின் பயனாகையால் மக்கள் மருந்தாராய்ச்சியில் பல இடுக்கண்களை எய்தியிருக்கக்கூடும். நச்சு மருந்துகளை உட்கொண்டு பலவகைப் பருவரல்களையும் அவர்கள் அடைந்திருக்க வேண்டும். பல வாய்ப்புகளை உடைய இக்காலத்து மக்களும் மருந்தாராய்ச்சியில் எண்ணற்ற துன்பங்களை எய்தி வருதலை நாம் கண்கூடாகக் காண்கின்றோம்.

அறிவுடைய விலங்கினங்களைப் போலவே பெரிதும் விலங்கோடொத்து வாழ்க்கை நிகழ்த்திய மக்கள் நெடுங்காலம் அவ்விழிவான வாழ்க்கையை மேற்கொண்டிருந்தனர் என்று கருதுவது பொருத்தம் உடையதாகத்தோன்றவில்லை மக்களுக்கு அறிவு ஒருகாலைக்கொருகால் வளம்படும் பண்பு உடையது மேலும், அவர்களுக்குப் பேச்சாற்றல் அமைந்திருக்கிறது. அவற்றைப் பயன்படுத்தாமல் மக்கள் வாளா இருந்தனர் என்பது பொருளற்றதாகும். மக்களுடைய அறிவும் ஆற்றலும் அவர்களை விரைவில் விலங்கியல் வாழ்க்கையில் நின்றும் நீக்கிப் படிப்படியாக உயரிய வாழ்க்கையில் உய்த்திருக்கின்றன. உணவு, உறைவு, மருந்து என்பவற்றை மக்கள் அமைத்துக்கொள்ள முயன்ற காலத்திலேயே அவர்களிடத்தில் கலையுணர்ச்சி தலைப்பட்டு விட்டதாகக் கருதலாகும். நோயுடன் வாழ்க்கை முயற்சிகளைச் செய்தல் இயல்வதன்றாகையால் மக்களது உள்ளம் மருந்துகளை நாடி அறிவதில் மிக விரைவுடன் ஒழுகியிருத்தல் வேண்டும். மக்களது கலைநாட்டம் மருந்தாராய்ச்சி தொடக்கத்தில் உறுதியானதோரிடம் பெற்றுவிட்டதாகக் கொள்ளலாம். கட்டடக்கலையே மக்களது முதற்கலை என்பது சிலருடைய கொள்கை. மக்கள் தமக்கு வரும் நோய்களை நீக்கி வாழ்க்கையை இனிதில் அமைத்துக்கொண்ட பிறகே அவர்களுக்குக் கலைகளின் மேல் நோக்கம் செல்லும் என்பதை ஈண்டும் நினைவுறல் வேண்டும். உறை-

வதற்கு யாதேனும் பாதுகாப்பான இடம் போதுவதாம். பிணிகளை நீக்க எப்பொருளாயினும் போதுவதாகாது, உரிய மருந்துதான் வேண்டும், நோய்வாய்ப்பட்ட மக்கள் எதனையும் ஆற்ற இயலாது. ஆகவே, மருந்தாராய்ச்சியிலே கலைநோக்கம் அரும்பத் தொடங்குகின்றது. உயரிய கட்டடங்களைச் செய்து முடிப்பதுவரை மக்கள் தமக்கு வரும் நோய்களைப் பொறுத்துக் கொண்டிருந்தனர் என்று கருதுவது சாலாது. உறையுள் சீராக வாய்க்கப் பெறாத மலைவாணர் குழுவிலும் மருத்துவக்கலை சிறந்து நிற்பதை இன்றும் பார்க்கிறோம்.

சிறந்த உறைவிடமும் மக்களுக்கு இன்றியமையாததே உணவு உறையுளினும் விடச் சிறந்தது. ஆகவே, உணவு, உறைவு, மருந்து என்னும் மூன்றையும் மக்கள் தேட முற்பட்டகாலத்தே அவர்களிடத்தில் கலைநோக்கம் அடிகோலியதென்றும், மருந்தாராய்ச்சியில் அக்கலை அரும்பி மலரத் தொடங்கிற்று எனவும் கொள்ளல்வேண்டும். எனினும் மருந்தாராய்ச்சி போதிய ஓரளவை எய்தியதும் அதன் கதழ்வு சிறிது தடைப்பட்டிருக்கக் கூடும். நோய்கள் பல்படிப்பட்டகாலங்களில் பல வடிவங்களில் தோன்றுதலால், மருத்துவக்கலை ஒரு குறிப்பிட்ட காலத்தில் முற்றுப் பெறுவதன்று. அது ஒருசார் முன்னேறி வந்து கொண்டிருக்க, அதனிடையே உணவு, உறையுள் இரண்டும் உயர்நிலை அடைவதற்குரிய உள்ள பொருளாராய்ச்சிக்கலையும் கட்டடக்கலையும் முன்னேறிவந்திருக்க வேண்டும். உணவுக்கலை முற்காலத்தில் மிக வளம் பெறாததற்குக் காரணம் மக்கள் தமக்குக் கிடைத்த உணவுகளால் அமைதி கொண்டதேயாம்.

எவ்வாறேனும் பசியை ஆற்றுதல் அமையும் என்று கருதிய மக்கள் பலவாறான சுவைகளையும் உயரிய உணவுகளையும் விரும்பினர். அதன் பயனாக உணவுக்கலை முன்னேறத் தொடங்கியது. தங்குதற்கு யாதேனும் இடம் கிடைத்தலே அமையும் என்று கருதிய மக்கள் நாளடைவில் மிகுந்த இட வாய்ப்பையும் இன்பத்தையும் அழகையும் விரும்பியதன் பயனாகக் கட்டடக்கலை முற்போக்கு அடையத் தொடங்கியது. இணைவிழைச்சு இன்பத்தையும் பலவாறாகத் துய்க்கக் கருதிய மக்கள் இன்ப நுகர்ச்சியையும் ஒரு கலையாக வடிவாக்கினார்கள்.

தனிமகன் பிறரால் மதிக்கப்படும் உயரிய வாழ்க்கையை விரும்புவது இல்லை. ஆகவே, கூட்டுறவு வாழ்க்கை மக்களிடை நாகரிக வாழ்க்கையை நிலைபெறச் செய்திருக்க வேண்டும். ஆடையும் அணியும் கூட்டுறவு வாழ்க்கையின் பயன்களாக வந்தவை. 'அணியெல்லாம் ஆடையின் பின்', 'உடையெல்லாம் உணவின் பின்'

ஆதலால், உணவு உறையுள் இரண்டும் வாய்த்தபின் மருந்துகளையும் தேடி அறிந்துகொண்ட மக்கள், அற்றம் மறைப்பதற்காக ஆடைகளைத் தேடுதல் இயல்பாகும். பலவகைப்பட்ட தழைகளையும் மரவுரிகளையும் விலங்கின தோல்களையும் மக்கள் ஆடைகளாகப் பயன்படுத்தியுள்ளார்கள் என்பது பழைய இலக்கியங்களால் அறியப்படும் உண்மை ஆகும். நூலாடைகள் கண்டறியப்பட்டபின்பும் மக்கள் சிலரிடத்துத் தழை முதலியவற்றை அணியும் வழக்கம் இருந்தது. பஞ்சினை அறியாத காலத்து மக்கள் எவ்வெவற்றை எல்லாம் ஆடைகளாகப் பயன்படுத்தினார்கள் என்று இக் காலத்தவர்கள் துணிந்து கூறுதல் அரிதாகும். தழைகள், ஓலைகள், மரவுரிகள், தோல்கள் முதலியவற்றைப் பண்டைக காலத்தில் மக்கள் ஆடைகளாக அணிந்திருக்கக்கூடும் என்று வரலாற்று வல்லுநர் கருதுகின்றார்கள். ஓலைகளை மிடைந்து செய்த பாய்களைச் சமணர்களில் ஒருவகையார் அணிந்து வாழ்ந்ததாகக் கூறப்படுகின்றது. இவ் வழக்கம் பிற்காலத்ததாயினும், இதற்கு அடிகோலியது அத்தகையதோர் முற்கால வழக்கமாம் என்று கொள்வது தவறாகாது. பாயுடை பண்டைக் கால மக்களிடத்தும் கைத்தொழில் தலைப்பட்ட பின்னே தோன்றியிருத்தல் வேண்டும். இன்பத்தையும் அழகையும் நாடுந்தோறும் கலையும் மக்களிடத்து விளக்கம் பெற்று வரும்.

நெருப்பு, வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒன்றாகையால் கற்கால மக்கள் முதன்முதலே அந்நெருப்பைப் பயன்படுத்தி இருத்தல் வேண்டும். கல்லொடு கல்லை உரசி அவர்கள் நெருப்பைத் தோற்றுவித்தனர் என்பர். அரணி என்னும் கருவி சிறிது பிற்காலத்தில் தோன்றியிருக்க வேண்டும். வேதத்தில் அரணிக்கட்டை பற்றிய வரலாறுகள் மிகுதியாகவே வருகின்றன. அரணிக்கட்டையால் நெருப்பை உண்டாக்கும் வழக்கம் மிக நெடுங்காலம் நிகழ்ந்து வந்திருக்கின்றது. ஏறத்தாழ ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் நெருப்பை உள்ளடக்கிய நச்சு மருந்துகளையும் (பாடாண வகைகள்) கருமருந்து போன்ற சில மருந்துகளையும் தமிழ்நாட்டு மருத்துவர்கள் கண்டறிந்தனராயினும், அவை அவர்க்கே நெருப்பு உண்டாக்குவதில் பயன்பட்டன. எனவே, நெருப்புக்கோல் கண்டறியப்பட்டது வரையிலும் அரணியும் அதுபோன்ற சில கருவிகளுமே நெருப்பு உண்டாக்குவதற்குப் பயன்பட்டன. இது உலகில் எல்லாமக்களுக்கும் ஒக்கும். நெருப்புக் கோலைக் கண்டறிந்ததுடன் உலகின் இருள் நீங்கிற்று என்று கூறல் வேண்டும்.

கற்காலத்தில் சில கலைகள் அரும்பத் தொடங்கின ஆயினும் அவை வளம் பெறுவதற்கு உரிய வாய்ப்புக்கள் இருந்தனவாகத் தெரியவில்லை. மக்களது பேச்சு மொழி அவரது தோற்றக்கால முதற் கொண்டே சிறிது சிறிதாக இயங்கத் தொடங்கியிருக்க வேண்டும். பேசவல்ல நாக்கு உடையவர்கள் பேசாது வாளா இரார். பொருள் முதலியவற்றின் பெயர்களும் பலவகை வினைச் சொற்களும் நடை-முறை வழக்கில் வருவதற்குச் சிறிது காலம் வேண்டும். மக்கள் தம் கருத்துக்களைச் சைகைகளால் தெரிவித்து வருவது ஏற்ற சொற்-கள் தோன்றாத காலத்தில் ஆகும். சைகை வழக்கியல் மக்களிடையே நெடுங்காலம் நிகழ்ந்திராது. பேசும் வல்லமை இருக்கும்போதும் பேசுவதன் இன்றியமையாமை ஏற்படும்போதும் மக்கள் சொற்கள் வாயிலாகத் தம் கருத்துக்களைத் தெரிவிக்க முயல்கின்றார்கள். சிறு குழந்தைகள் பேச விரும்புவதை உன்னும்போது பேச்சு என்பது மக்களிடத்தில் விரைவாக அமைவதாகும் என்பது புலனாகும்.

மொழி ஒவ்வொரு மக்கட் குழுவினிடத்தும் ஒவ்வோரியல்பு பற்றித் தோன்றுவது. உள்ளக் குறிப்பு, உள்ளவியல்பு, உணவு உட-லமைப்பு வழக்கியல், உறைவிடவியல்பு, கால நிலை, அறிவு முதலிய-வற்றிற்கு ஏற்ப மொழிகள் வேறுபடுகின்றன. ஓரினப்பட்ட மக்கட் குழுவினரிடத்தே தோன்றும் மொழிகள் பலவகையில் ஒத்து நிகழ்-வதற்கு அவர்களுடைய உள்ளக் குறிப்பு முதலியனவே காரணங்கள் ஆகும். அறிவுடைய மக்கட் குழுவினரிடத்தில் தோன்றும் மொழிகள் பொதுவறிவுக்குப் பொருத்தமான இலக்கண நெறிகள் அமைந்திருப்-பனவாகக் காணப்படுவது இயல்பு. பேசும் வல்லமை இருந்தும் பேசாத மக்கள் உளரோ? பேசும் இயல்புடையோர் குழுவில் யாதே-னும் ஒருமொழி உருவாகிவிடும். இன்றேல், அக்குழுவினர் தம்மை அண்மி வாழ்வாரது மொழியைப் பேசத் தலைப்படுவர். மக்களிடையே தலை வரும மொழித் தோற்றம் வியப்புக்கு உரியது. மக்களுடைய சிறந்த பண்புகளில் பேசுதல் சிறந்த இடம் பெற்றுள்ளது. எழுத்துக்-களின் வரி வடிவம் மிகப் பிற்காலத்தில் தோன்றியிருக்க வேண்டும் என்று சிலர் கருதுவர். கூட்டுறவு வாழ்க்கை உறுதி கொண்ட காலத்தில் ஒலி எழுத்துக்களுக்குரிய வரி வடிவங்கள் கண்டறியப் பட்டிருத்தல் வேண்டும் என்று கருதுவது பொருத்தமானதே ஆகும். அவ்வெழுத்துக்கள் தரையிலும் சுவர்களிலும் இலைகளிலும் தோல்-களிலும் பிறவற்றிலும் நகம், முள், கோல் முதலியவற்றால் எழுதப் பட்டிருக்க வேண்டும்.

மொழிக்கலையுடன் இசைக்கலையும் தோற்றம் செய்திருக்க வேண்டும். குயில், பூவை முதலியவற்றின் குரல்கள் மக்களுக்குள் இசையார்வத்தை உண்டுபண்ணியிருக்கக் கூடும். இசை நூல்களில் சொல்லப்படும் குரல் முதலிய ஏழு ஒலிகளும் குறிப்பிட்ட சில விலங்கு, பறவைகளின் ஒலிகளுக்கு ஒப்பாகக் கூறப்படுகின்றன. இனிய ஓசையில் யாவர்க்கும் விருப்பம் எழுவது இயல்பு. ஆதலால், மக்கள் இயல்பாகவே தம் குரலை இனிமை தோன்றுமாறு மிழற்ற முயன்றனர் என்பதும் மறுக்க முடியாதது ஆகும். மக்கள் அமைதியாக இருக்கும் பொழுதும் உள்ளவெழுச்சிகளொடு (மனவிகாரங்கள்) படாத செயல்களைச் செய்யும் பொழுதும் இயல்பாகவே இசை தோன்றுதற்கு வாய்ப்பு ஏற்படுகின்றது. போர் புரிதல் முதலிய வல்வினைகளை ஆற்றுங் காலத்தில் இசை தோன்றுவது இயல்பன்று. மக்கள் தம்முடைய உள்ள நிகழ்ச்சிகளையும் பண்புகளையும் இசை வாயிலாக வெளிப்படுத்தினார்கள். உவகை, பெருமிதம், அவலம் முதலிய சுவைகள் இசை வழியாகப் புலப்படுத்தப்பட்டன. இன்ன இசை இன்ன சுவைக்கு உரியது என்ற இசைநூல் வரம்பு மேற்கூறிய நெறியால் எழுந்ததாகும். இசைகளுக்கு உரியனவாகச் சொல்லப்படும் வரையறையும் பண்டை வழக்குப் பற்றி வந்ததாகல் வேண்டும்.

உள்ளக் குறிப்புக்களை வெளிப்படுத்த முயன்றதன் பயனாகவே நடனக்கலை தோன்றலாயிற்று. உவகை பெருமிதம் முதலிய உள்ளக் குறிப்புக்கள் தோன்றும்பொழுது முகம் வேறுபடுதல், சில உறுப்புக்கள் வெவ்வேறு வகைப்பட இயங்குதல், உடம்பு இயங்குதல் முதலியன காணப்படுகின்றன. இவ்விறல்களைக் காண்பதனால் உண்டாகும் இன்பத்தை நுகரும் வேட்கையே நடனக்கலைத் தோற்றத்துக்கு அடிப்படை. உள்ளத்து எழுங் குறிப்புக்களை சைகை வகையால் நன்கு வெளிப்படச்செய்வதே நடனக்கலையின் தலை சிறந்த இலக்கணமாக இன்றும் பாராட்டப்படுகிறது. மயில் முதலியன ஆடுவதை நோக்கி மனிதன் ஆடக் கற்றான் என்பதும் சோம்பிக் கிடந்த மனிதன் சுறுசுறுப்பு உண்டாவதற்காக ஆடத் தொடங்கினான் என்பதும் கோவில்களில் தெய்வங்களுக்கு மகிழ்ச்சி உண்டாக்குமாறு மனிதன் ஆடுதலை மேற்கொண்டான் என்பதும் எத்துணைக்குப் பொருந்தும் என்பதை அறிஞர்கள் ஆராய்ந்தால் அவை நீக்கத்தக்கனவேயாம். தெய்வங்களுக்காக மக்கள் ஆடுவதும் சில கருத்துக்களைத் தெய்வத்தின் முன்னிலையில் வெளிப்படுத்துவதையே கருத்தாக உடையது.

சைகைகளாலும் மொழிகளாலும் மக்கள் தம் கருத்துக்களையும் சிறுபான்மை உள்ளக் குறிப்புக்களையும் புலப்படுத்தி வந்தார்கள். உள்ளக் குறிப்புக்களைச் சொற்களால் வெளிப்படுப்பது அரிதாகையால், அக்குறிப்புக்களால் வெளிப்படும் விறல்களுக்கு உரிய சொற்களைப் பயன்படுத்தி அவற்றைப் பிறர்க்குப் புலப்படுத்தினர்கள்; இசைகளால் மக்கள் தங்கள் உள்ள நுகர்ச்சிகளைப் புலனக்கினர்கள். நடனத்தால் பெரும்பாலும் தம் உள்ளக் குறிப்புக்களையும் சுவையுணர்வுகளையும் சிறுபான்மை கருத்துக்களையும் காட்சிப்படுத்தினர்கள். பரவை வழக்கில் இசையும் நடனமும் நிகழ்தல் அரிதாகலின், அவை கலைகளாக அமைக்கப் பெற்றன; சிவபெருமானது நடனமும் ஐவகை நிகழச்சிகளைக் குறிக்கோளாகக் கொண்டதாம் என்பதும் அது பொழுதுபோக்கிற்காகவோ இலக்கியச்சுவை பயப்பதற்காகவோ ஏற்பட்டதன்று என்பதும் இங்குக் கருதத்தக்கன.

கற்கால மக்களை அடக்கி யாட்சி புரிவதற்கு உரியதொரு ஆட்சி ஏற்பட்டிருத்தலைப்பற்றி ஐயம் நிகழக் கூடுமாயினும், கூட்டுறவு வாழ்க்கை உறுதிப்படும்போது, மக்கள் வாழ்வில் ஒரு நெறிமையும் திட்டமும் கட்டுப்பாட்டொழுக்கமும் அவற்றைப் பேணுவதற்கு வேண்டும் ஒருவகை ஆட்சியமைதியும் ஏற்பட்டிருக்க வேண்டும் என்று கொள்வதில் ஐயப்பாடு நிகழ்வதற்கில்லை. அவ்வாட்சியமைதி தொடக்கநிலை மக்களாட்சி முறையாகவே இருந்திருக்கக் கூடும். ஊராட்சிக் கழகங்கள் முதலியன அத்தகையன ஆகும். மக்கள் பலரைத் தம்முடன் அணைக்கவல்ல சொற்றிறனும் உடல் வலிமையும் ஆட்சித் திறனும் அறிவுரனும் உடையவர்களால் அடக்கியாளப்படும் மன்னட்சிமுறை பிற்காலத்ததாகவே கொள்ளவேண்டும். அத்தகைய மன்னர்களும் பெரும்பாலோரான மக்களை வெல்லுந்திறனை அடைதலரிதாதலால், அவர்கள் குறிப்பிட்ட சில நிலப்பகுதிகளுக்கு மட்டுமே மன்னர்களாக இருக்க இயலும். ஆகவே, சிற்றரசர்களது ஆட்சியே மக்கள் வாழ்க்கைத் தொடக்கத்தில் அமைந்திருக்க வேண்டும். அவர்களும் பல காரணங்களால் தம்முள் இகல் விளைத்திருதலும் நிகழத்தக்கதே. அவ்விகலின் விளைவாகவே மன்னரது பேராட்சி நிலவியிருத்தல் வேண்டும். கூட்டுறவு வாழ்வில், மக்கள் தம்முள் முரண்விளைக்குங்காலத்து, அவர்களே தம்மை ஒரு நெறிப்படுத்தும் பொருட்டுத் தமக்கேற்ற தலைவரைத் தேர்ந்து அமைத்துக் கொள்வதும் வாழ்க்கை நிகழ்ச்சிகளில் ஒன்றாகும். அது, இக்காலத்தில் ஒரு கூட்டத்திற்கு ஒரு தலைவரை நாம் தேர்ந்து எடுப்பது போல்வது.

மக்களிடையே தந்நலம், பொருமை, ஆர்வம் முதலியன வளர்ந்து வருவதும் அவை காரணமாக இகல் விளைவதும் இயல்பு. ஆகவே, மக்களின் வாழ்க்கைத் தொடக்கத்திலே சட்டமும் நெறிகளும் (Law and order) புகுந்து சிறிது சிறிதாக இடம் பெற்றிருக்க வேண்டும். தம்மை அடக்கியாள்வதற்குரிய யாதேனும் வகைப்பட்ட-தொரு ஆட்சி வேண்டப்படாதவகையில் மக்கள் இன்னும் எவ்விடத்தும் சீர்திருத்தம் பெற்றிலர். நிரம்பிய அச் சீர்திருத்தமே உண்மையான நாகரிகத்தையும் உயரிய வாழ்க்கை நிலையையும் மக்கள் அடைந்-துள்ளனர் என்பதற்குச் சான்று ஆகும். அதுகாறும் மக்கள் சீர்-திருத்தம் நிரம்பியவராகக் கூறுவதில் நிறைந்த பொருள் இல்லை. அதுவே உலகின் பொற்காலம். அக்காலத்தை உள்ளக்காட்சியிலேனும் காண்பது அரிது போலும்!

மக்களது வாழ்க்கைச் சிறப்பே நாகரிகம் எனப்படுவது. நாகரிகம் என்னும் சொல் இப்பொழுது மிக விரிவுடைய பொருளில் வழங்கப்படுகிறது. நகர வாழ்க்கைக்கு உரிய பண்பாடே நாகரிகம் என்னும் சொற்குப் பொருளாம். இப்பொழுது அது மக்களுடைய வாழ்க்கை நெறி, ஒழுக்கம், கலை, அறிவியலாராய்ச்சி, ஆக்கப் பொரு ளறிவு, பலவகைத் தொழில்கள் முதலியவற்றின் மேம்பாட்டு நிலையைக் குறிக்கும் ஒரு சொல்லாக வழங்கப்படுகிறது. ஆயினும், உண்மையான அறிவின் பயனாகிய ஒழுக்கமும் பண்பாடுமே உண்மை நாகரிகமாம் என்பது அறிஞர் கொள்கையாக நிலவுகின்றது. பொழுதைக்கொரு செயலும் பொழுதைக்கொரு புனைவும் இன்றியமையாத பயனைத் தராவிடில் நாகரிகத்திற்கு அறிகுறிகள் ஆக மாட்டா.

பண்டைக்கால மக்கள் பயன்படாத செய்கைகளில் முற்பட்டிருப்-பார்கள் என்று கூற இயலாது. வாழ்க்கைச் சீரமைப்புக்கே பாடுபட வேண்டும், கடன்மை இருக்கும்போது பயனற்ற செயல்களில் ஈடுபட அவர்க்கு நேரம் ஏது? வாழ்க்கை ஏற்ற பெற்றி அமைந்தபின்புதான் நாகரிகம் அற்ற துறைகளில் மக்கள் ஈடுபடத் தொடங்குகின்றார்கள். அரணிக்கட்டையும் மரவுரியாடையும் இக்காலத்தவர்க்கு நாகரிகம் இல்லாதனவாகத் தோன்றக்கூடும். அக்கால நிலைக்கு அவை நாக-ரிகத்தொடு பொருந்தியனவாகவே கருதப்பட்டன. மருந்துப் பொருளும் பஞ்சும் கண்டுபிடிக்கப்படுவது வரை அரணிக்கட்டையும் மரவுரியும் நாகரிகம் இல்லாதவை என்று கருதல் தகாது. இப்போது நாகரிகம் எனக்கருதப்படுவன பிறிதொரு காலத்து நாகரிகம் இல்லாதவையாகத் தோன்றலாம். ஆயினும், இக்காலத்து அவைநாகரிகமாகவேகருதப்படு

கின்றன. இயற்கைப் பொருள்களைப் பயன்படுத்திச் செயற்கைப் பொருள்களைச் சிறப்புற ஆக்குந்தோறும் நாகரிகம் முற்போக்கு அடைந்து வரும். ஆதலால் முற்காலத்தவை முற்றிலும் நாகரிகம் அற்றவை எனக கருதத்தக்கன அல்ல. நாகரிகம் பல படிகளிலாக முற்போக்கு அடைந்து வருகின்றது என்று கொள்வதே பொருத்தமானது.

இயற்கையொடும் அறிவொடும் பொருந்தாதவையே நாகரிகமற்றவை என்று நீக்கத்தக்கனவாம். பௌராணிமதத்தில் காணப்படும் சில நெறிகள் நாகரிகமற்றவை என்று கருதப்படுகின்றன. அவை விலங்கினங்களைப் புணர்தல், பிறவுயிர்களைக் காரணம் இன்றிக் கொல்லுதல் முதலியன. பண்டைக்கால மக்களுள் சில சார்பினரிடத்து இத் தகைய செயல்கள் நிகழ்த்திருத்தல் கூடும் என்று கொள்வதற்குப் புராணங்கள் சிலகருவிகள் ஆகின்றன. இன்றும் அநாகரிக ஒழுக்கங்கள் மக்களிடத்து இல்லை என்று உரைப்பதற்கில்லை, ஆகவே, பண்டை மக்களும் தோற்றத்திலே உயரிய நாகரிகம் உடையவர்களாக இருந்தார்கள் என்றும் கருத இயலாது. மக்கள் நாளேற நாளேற நாகரிக நிலையை முன்னிட்டுச் செல்கின்றார்கள் என்று தொகுத்துக் கூறுவது பொருத்தமாகும். உண்மையறிவும் அவ்வறிவுக்கு ஏற்ற ஒழுக்கமும் பண்பாடும் உண்மை நாகரிகத்துக்கு அடிநிலங்கள் எனப்படும். மக்கள்மாட்டு இவை குறைவுறும்போது நாகரிகம் உருப்பெறுது. நாகரிகம் வாய்ந்த நிலப்பகுதிகளிலும் அநாகரிகச் செயல்கள் மக்களிடையே காணப்படுவதற்கு மேற்கூறியவை நன்கு நிரம்பாமை காரணமாகக் கருதப்படும்.

நடுவுநிலைமையில்நின்றும் வழுவிய செயல்கள் நாகரிகம் ஆகா. அவை பண்பாட்டின் பயன்கள் அல்ல, உயரிய நோக்கமும் பயனும் இன்றி எழும் போர்களும் பிற அழிவினைகளும் நாகரிகத்தின்பால் ஆமோ? மக்களின் வாழ்க்கைக்குப் பயன்படுவது யாது அது நாகரிகம். அவ் வாழ்க்கையை அழிப்பது யாது அதுவே அநாகரிகம். பிறர் வாழ்தற் பொருட்டு ஒருவன் தன் வாழ்வை இழப்பது நயத்தக்க நாகரிகம். தான் வாழும் பொருட்டுப் பிறர் வாழ்வை அழிப்பது அழிதக்க அநாகரிகம். இந்நெறிப்பட நோக்குமிடத்துப் பண்டை மக்களது வாழ்க்கையிலும் நாம் போதிய நாகரிகத்தைக் காணமுடியும்.

நாகரிகமும் வழக்கியலும் (ஆசாரமும்) வேறுபாடு உடையவை. அவை காலந்தோறும் வேறுபடக்கூடும். பண்டைக்கால மக்களது மணமுறை, இல்லற வாழ்க்கை, தனி வாழ்க்கை, கூட்டுறவு வாழ்க்கை, இறுதிவினை (ஈமச்சடங்கு) முதலியனவற்றில் இக்கால வழக்கில் இன்றும் சிறிதுசிறிது வேறுபட்டிருக்கலாகும்,

இறந்த ஒருவன் மீண்டும் பிழைக்கவும் கூடும் என்றுகருதிப் பண்டைய மக்கள் பிணங்களைப் பேணிவந்தார் என்றும் அவற்றை அழிக்காமல் தாழிகளில் புதைத்தார்கள் என்றும் சிலர் கருதுகின்றனர். இறந்த பறவைகள், விலங்குகள் முதலியன மீண்டும் எழுந்திராத நிலையைக் கண்ட மக்கள் இறந்தவர் மீண்டும் எழுந்திரார் என்பதை அறியாதிரார். அறியாதிருப்பினும், பிணங்களை வெளியே வைத்துக் காப்பரன்றி மூடிவையார். ஆகவே, தாழியால் பிணங்களை மூடிவைக்கும் வழக்கம் பிணங்களை அடக்கம் செய்வதொரு முறையாக இருந்திருக்க வேண்டும். கடைச்சங்கக் காலத்திலும்கூடத் தமிழ்நாட்டில் அவ் வழக்கம் இருந்து வந்ததாக நூல்கள் வாயிலாக அறிகின்றோம். அக் காலம் வரை இறந்தவர் பிழையார் என்பதை மக்கள் அறியாதிருந்தனர் என்பது பொருந்தாது அன்றோ? இதனாலும் பிணங்களைத் தாழியால் கவிப்பது சிலசார்பினரிடையே நிகழ்ந்த வழக்கமேயாம் என்பது புலனாகின்றது பிணங்களைத் தாழியால் கவிப்பதும் குழிவெட்டி அதில் புதைப்பதும் நிலத்தின்கீழ்க் கல்லறையில் அடக்கம் செய்வதும் சுட்டுச் சாம்பலாக்குவதும் பண்டைக்கால வழக்கங்களாக அறியப்படுகின்றன. இவற்றுள்சில இக்காலத்தும் நிகழ்ச்சியில் இருந்துவருகின்றன. தாழியால் பிணங்களை மூடும் வழக்கம் நின்றுவிட்டது. பிணத் தாழியை முதுமக்கட்டாழி என்று வழங்குவர். மரப்பேழைகளில் பிணங்களை வைத்து அடக்கம் செய்யும் வழக்கம் இக்காலத்தில் சில வகுப்பினரிடத்தில் காணப்படுகின்றது.

பொற்காலத்தின் (உலோக காலத்தின்) தொடக்கத்தில் மக்களது நாகரிகம் சில படிகளைத் தாண்டி நின்று வளம்படத் தொடங்கியது. கல், மரம் முதலியவற்றை விடத் தொழில் செய்வதில் இரும்பு முதலிய தாதுக்கள் மக்களுக்கு மிக உதவி செய்தன. அம்பு, வாள், ஈட்டி முதலிய படைகளை ஆக்கவும் வாழ்க்கைக்குரிய கருவிகளைச் செய்யவும் மக்கள் கற்றுக் கொண்ட காலம் பொற்காலமேயாம். மலைகளைப் பிளக்கவும் கற்களால் அம்மி உரல் முதலியவற்றைச் செய்யவும் ஆடைகளைச் செய்யவும் அணிகளை ஆக்கவும் மக்கள் இக்காலத்தில் கற்றுக் கொண்டனர். சிறந்த உறைவிடங்கள் அமைக்கவும் கோயில்களைக் கட்டவும் இசைக் கருவிகளைச் செய்யவும் மரப்பொருள்களைச் செய்யவும் மக்கள் கற்றுக் கொண்ட காலமும் இதுவே. இக் காலம் முதற்கொண்டு மக்களிடையே நாகரிகம் விரைவில் வளரத் தொடங்கியது. மக்கள் தாதுக்களை மருந்துகளாகப் பயன்படுத்தும் முறையை அறிந்து கொண்டதும் இக்காலத்தேதான்.

நாகரிகம் ஒருபால் வளர்ந்ததாயினும் இக்காலத்தில் படைகளின் உதவி பல பெரும் போர்களுக்குக் காரணமாக இருந்திருக்க வேண்டும் எனக் கருதலாகும். மரங்களை உதவியாகக் கொண்டு கடலில் மிதந்து சென்ற மக்கள் இக்காலத்துச் சிறிய தோணிகளில் மிதந்து சென்றிருக்க வேண்டும். பின்னர்க் கப்பல்களும் புனலூர்திகளாக உதவியிருக்க வேண்டும். முதன்முதல் மக்கள் மரங்களையே மிதவைகளாகப் பயன்படுத்தினர் என்பது பொதுவாக மரக்கலங்களுக்கு எல்லாம் மரம் என்று பெயர் கூறுவதனால் அறியலாகும்.

மக்கள் மொழிகளை ஏட்டில் எழுத்தாணியால் வரையத் தொடங்கிய காலமும் இதுவே ஆதல் வேண்டும். மொழிவளம் பெறுவதற்கும் ஒரு சாரார் பிறசாராருடைய மொழியை எழுத்து வாயிலாகக் கற்றுக் கொள்வதற்கும் பல இலக்கியங்கள் தோன்றுவற்கும் இக்காலம் நன்கு உதவியிருக்க வேண்டும். இக்காலம் நீட்டித்ததொரு கால வரம்பு உடையதாகையால் மக்களுடைய பல முன்னேற்ற நெறிகளும் இதனுள் அடங்கும். அப்பொற்காலத்தின் தொடர்ச்சியே இன்றும் நிகழ்வது என்று கூறினும் தவறாகாது. இக்காலத்தைப் பொற்காலத்தின் பொற்காலம் என்று கூறலாகும்.

கொற்றொழில், கொற்றுத் தொழில், சிற்பத்தொழில். ஓவியத் தொழில், கொத்து வேலை முதலியன சிறந்த நிலையை எய்துவதற்கு இக்காலம் பெரிதும் பயன்பட்டது. இவற்றுள் சில கலைகளாகவும் காட்சி தந்தன. மக்களது நாகரிகம் இக்காலத்தில் கண் விழித்தது. நிலத்தின் கீழுள்ள செல்வங்களைக் கண்டெடுக்க இக்காலம் துணை நின்றது. கடலாரம் பணியாரங்களில் ஒளிர்ந்தன. பொன்னும் மணியும் பொதுளி இடம் எங்கும் செல்வம் புரண்டது. ஊர்களும் நகரங்களும் உருவாயின, வாழ்க்கை செப்பமுற நிகழ்வதற்குரிய திட்டங்களும் நெறிகளும் வகுக்கப்பட்டன. மக்கள் வாழ்க்கை விலங்கியல் வாழ்க்கையில் நின்று தனிப்பட்ட சிறப்புடன் வேறுபட்டு விளங்கிற்று. பிறப்பிடமும் தொழிலும் பற்றிய வகுப்புப் பிரிவினைகள் தலைகாட்டத் தொடங்கின. தொழில் முயற்சிகளும் கொள்கைகளும் வாழ்க்கையியல்புகளும் பலவாறாக வேறுபடுங்கால் வகுப்புப்பிரிவினைகள் ஏற்படுவது இயல்பே. ஆயினும் ஓரினத்து மக்களுடைய கூட்டுறவு வாழ்க்கை இக்காலத்தில் உறுதி பெற்றிருக்க வேண்டும்.

## 'இன்' எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி

ஏ. ஆதிந்தன்,
மதுரைக்காமராசர் பல்கலைக்கழகம்

பெயர்ச் சொல்லுக்கும் வினைச்சொல்லுக்குமிடையே உள்ள பொருட்டொடர்பாகிய இலக்கண உறவே வேற்றுமை எனப்படும். இவ்வுறவு சில ஒட்டுக்களால் (வேற்றுமை உருபு) வேறுபடுத்திக் காட்டப் பெறுதலும் உண்டு. தொல்காப்பியர் ஐந்தாம் வேற்றுமை எனக் குறிக்கும் 'இன்' எனப் பெயரிய வேற்றுமையினை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தொல்காப்பியர் வேற்றுமை உருபினை அடிப்படையாக கொண்டு ஐந்தாம் வேற்றுமை எனும் பாகுபாட்டை அமைத்தாரா இன்றேல் இலக்கண உறவினை அடிப்படையாகக் கொண்டு அமைத்தாரா என்பது ஆய்வுக்குரிய ஒன்றாகும்.

''ஐந்தாகுவதே
இன்னெனப் பெயரிய வேற்றுமைக்கிளவி
இதனின் இற்றிது என்னுமதுவே (தொ.சொல், 75).

ஐந்தாம் வேற்றுமையின் உருபு 'இன் எனவும் அது 'இதனின் இற்று' என்பதைப் புலப்படுத்தும் எனவும் தொல்காப்பியர் குறிக்கின்றார். இவ்வுருபு பெரும்பான்மையும் ஒப்புப்பொருளில் செயலாற்றுகின்றது. உரையாசிரியர்கள் 'நீக்கம்', 'எல்லை' 'ஏது' ஆகிய பிற பொருட்களையும் இவ்வேற்றுமைப் பொருண்மையினதாகக் குறிக்கின்றனர். உரையாசிரியர்கள் கூற்றிற்குத் தொல்காப்பிய நூற்பாவே இடம் தருகின்றது. ஐந்தாம் வேற்றுமையின் பயனிலைப்பாடு தோன்றும் நிலைமையினை விளக்கும் வாயிலாக அவ்வேற்றுமையின் புறநிலை வழக்குகளை (external distribution) விளக்கும் நூற்பாவில்[2] இருபத்திநான்கு புறநிலைவழக்குகள் ஒப்புப் பொருண்மையில் அமைகின்றன. ஏனையவை 'எல்லை', 'நீக்கம்' 'ஏது' ஆகிய பொருண்மையில் அமைகின்றன.

---

1. தொல். சொல். தெய்வச்சிலையார் உரை—75
2. தொல். சொல். தெய்வச்சிலையார் உரை—76.

சங்ககால இலக்கியங்களில் 'இன்' பெரும்பான்மையும் 'ஒப்புப் பொருண்மையில்' தான் கையாளப்பட்டுள்ளது. தொல்காப்பியரும் 'இதனது இற்று இது' என இதற்குப் பொருள் தருவதால் ஐந்தாம் வேற்றுமையினை ஒப்புப் பொருள் வேற்றுமையாகத்தான் கொண்டுள்ளார் எனக் கருதலாம் தொல்காப்பிய மொழியில் 'இன்' உருபு 'உவமப்பொருவு', 'உறழ்பொருவு' (ஐப்போல, ஐ விட) என்ற இருநிலையிலும் கையாளப்பட்டு வந்திருக்கின்றது.

'இன்' உருபுப் பொருண்மைக்கு நிகரான 'ஐ(ப்) போல, அல்லது 'ஐ விட' என்பதனை நாம் ஐந்தாம் வேற்றுமையாகக் கருதாது இரண்டாம் வேற்றுமையாகத்தானே கருதுகின்ரேம். சங்ககால இலக்கியத்திலும் 'இன்' உருபுப் பொருண்மைக்கு நிகராக 'ஐ(ப்) போல' என்பது பயன்படுத்தப்பட்டு வந்துள்ளமையினைக் காணலாம்.

''தோய் மடல் சின்னுார் (ஐ) போல'' (நற்றிணை, 133)

'இன்' உருபு உணர்த்தும் பொருண்மையினை ஏன் நாம் தொல்காப்பியனுர் கூறும் இரண்டாம் வேற்றுமையின் புறநிலை வழக்கில் கூறப்படும் 'ஒப்பு' (தந்தையை ஒக்கும் – தந்தையைப்போல இருக்கிருன்) என்னும் பிரிவில் சேர்க்கக்கூடாது? இதனை வேறுவகையாகவும் அமைத்துக்காட்டலாம்.

காக்கை-இன் கரிது களம்பழம்.
காக்கை-ஐ-விடக் கரியது களம்பழம்.

காக்கையின் கரியது என்ற தொடரில் இரண்டாம் வேற்றுமை உருபு தொக்கு வருகின்றதெனவும் 'இன்' தனித்து வழங்கா உவம-உருபு எனவும் கொள்ளலாம். 'போல்', 'விட' என்னும் உவமஉருபுகள் போல 'இன்' என்னும் வடிவம் தொல்காப்பியர் காலத்தில் வழங்கி வந்துள்ளது என்றும், சார்புநிலையில் (தனித்து வழங்கா நிலையில்) இதனை ஒரு வேற்றுமையாகத் தொல்காப்பியர் கருதிவிட்டார் எனவும் கொள்ளலாம். (ஈண்டு மு. வரதராசனுரின் இது பற்றிய கருத்து குறிப்பிடத்தக்கது).

அடுத்து உரையாசிரியர்கள் 'இன்' உருபு 'ஒப்புப்பொருள்' நீங்கலாகக் குறிக்கும் ஏனைய மூன்று பொருண்மையினைக் காணலாம். நீக்கம்: ''நின்னின் விடா நிழற்போல் (கலித்தொகை 61)

நாரை காலை (இல்) இருந்து மாலை சேர்க்கும்''
(ஐங்குறுநூறு,157).

எல்லை: குமரியின் தெற்கு (புறநானூறு.6).
(குமரியிலிருந்து தெற்கு).

'நீக்கம்' 'எல்லை' ஆகிய இருபொருண்மையினையும் ஏழாம் வேற்றுமை இடப்பொருண்மையில் சேர்த்துக் கொள்வதே பொருத்தமானது.

ஏது: ''அருவிடரோ சிறுநெறி ஏறலின் வருந்தி'' (புறம், 135).
''செல்யானை சீறி மிதித்தலால்'' (களவழி நாற்பது).

'ஏது'ப் பொருண்மையினை மூன்றும் வேற்றுமை 'அதனின் ஆதல்' என்ற பொருண்மையில் சேர்த்துக் கொள்ளலாம்.

நீக்கம், எல்லை, ஏது ஆகிய மூன்று பொருண்மையினைப் பிற்கால வளர்ச்சியாகக்கூடக் கருதலாம். எனவே தொல்காப்பியர் 'இன்' உருபுக்குக் கூறும் பொருண்மையும், உரையாசிரியர்கள் கூறும் பொருண்மையும் வெவ்வேறு வேற்றுமையின் புறநிலைவழக்கில் வரும் பொருண்மையதாய் அமைகின்றனவேயன்றித் தனியொரு வேற்றுமைப் பொருண்மையதாக அமையவில்லை.[3] இதனை நோக்கும்போது தொல்காப்பியர் உருபு காரணமாகவே ஐந்தாம் வேற்றுமை எனத் தனி ஒரு வேற்றுமை அமைத்துவிட்டார் எனக் கருதுதல் வேண்டியுள்ளது.

---

3. ஐந்தாம் வேற்றுமை உருபாகக் கூறப்பெறும் 'இன்' என்பதனை உவமஉருபாகக் கருதுதல் ஏற்புடைத்தாக அமைகின்றது. ஏனெனில் 'இன்' உருபிற்குச் சொல்லுருபாக 'ஐ(ப்)போல' என்பதனைக் கருதும்போது சிற்சில சிக்கல்கள் ஏற்படுகின்றன.

## காலத்தின் கோலம்*

புலவர். சி இராமசாமி
ஒற்றைக்கடை

ஒருநாள் மாலையில் உலர்ந்த வயலில்
சின்னஞ் சிறுவர் சேர்ந்தொன் றாகி
விளையா டுமவ் வேளையில் 'நிலமகள்
என்னிடம் பொருளேதும் இல்லையே' என்று
சோம்பி இருந்து துயருறு வார்தம்
சிற்றறி விற்குச் சிரிப்பது போல'
வாய்பிளந் திருந்த வயலின் வெடிப்பில்
வியத்தற் குரிய வகையில் விளங்கிய
பொருள்தான் ஒன்றைப் பொருக்கென எடுத்தனர்

அப்பொருள் கோழியின் முட்டை அளவாய்ச்
செப்பிடும் வண்ணம் சிறந்து திகழ்ந்தது.
அன்னதைச் சிறுவர் இன்னதென் றறிந்திலர்
அவ்வழி வந்த ஆண்மகன் ஒருவனும்
பொருளது கண்டு பெருவியப் படைந்தான்
அவனும் அறிந்திலன் அதன்வர லாற்றை!
ஆயினும் தானதை அடையக் கருதிக்
கையில் இருந்த காலணாக் காசைச்
சிறுவர்கைக் கொடுத்துப் பொருளதை வாங்கி
நடந்தனன் அந்த நகர்வேந் தனிடம்.

வேந்தனும் அந்த வியத்தகு பொருளைக்
கண்டு மகிழ்ச்சி கொண்டவ னாகி
அப்பொரு ளுக்குடன் அருவிலை தந்து
வாங்கி வைத்தனன் வரலா றறிய.

மன்னவன் உடனே வாங்கிய பொருள்தான்
இன்னதென் றறிய எண்ணங் கொண்டு
அறிஞர் பலரையும் அவையில் கூட்டி
''இதனையா ராய்ந்தே எமக்குரை செய்வீர்!''
என்றனன். ஆய்ந்தவர் எவர்க்கும் அதன்நிலை
புலப்படல் இன்றிப் புதிராய் இருந்தது.

*டால்ஸ்டாய் கதைத் தழுவல்.

ஆதலின் அதனையா ராய்ச்சி அறையிலோர்
சாளரப் பக்கம் சார்ந்திட வைத்தனர்.
பிறிதொரு நாளிலோர் பெட்டைக் கோழி
அறைக்குள் நுழைந்துதன் அலகால் அதனைக்
கொத்தித் துளைத்ததைக் கூடி யிருந்தோர்
கண்டதும் மகிழ்ச்சி கொண்டவ ராகி
அரசனை அடைந்து அன்னவன் அறிய
''இதுவொரு தானியம்'' என்றுரைத் தனரே.

வேந்தன் கேட்டு வியந்தவ னாகி
''எப்பொழு தெங்கே? இப்பெருந் தானியம்
விளைந்த தென்பதை மேலுமா ராய்ந்து
சொல்வீர்!'' என்னத் தொடர்ந்தவ் வறிஞர்
மீண்டுமா ராய்ச்சியில் மேவினர் பலப்பல
புத்தக ஏடுகள் புரட்டிப் பார்த்தனர்
பார்த்தும் அவற்றால் பயனெதுங் கண்டிலர்
ஆகவே அன்னோர் அரசனை அடைந்து
''அரசே தங்கள் ஆணையின் படியே
ஆய்ந்தோம்! ஆய்ந்தோம்! அரும்பெரு நூல்களைத்
துருவியும் பார்த்தோம் துலங்கிய தில்லை.
ஆயினும் இப்பொருள் உண்மையை அறிய
வேறொரு வழியை மேற்கொளல் ஆகும்.

ஊரில் உள்ள உழவர்கள் சிலரை
அழைத்துக் கேட்பின் அறியலாம் உண்மை!
அவர்தம் முன்னோர் அறிந்துவைத் துள்ளதை
இனிதாய்க் கேட்டறிந் திருப்பா ரவர்தாம்
இப்பெருந் தானியம் எப்பொழு தெங்கே
விளைந்த தென்பதை வினவி யறியலாம்''
என்றனர் அறிஞர். இதுகேட் டரசன்
'நன்றெ'னக் கூறி நாட்டஞ் செலுத்தி
அண்மையில் உறுபணி யாட்களை அழைத்துக்
'கிழவனா யுள்ள உழவன் ஒருவனைக்
கொணர்மின்!'' என்று கூறலும் விரைந்து
சென்றவர் ஒருவனைத் தேடிக் கொணர்ந்து
முன்னே நிறுத்தினர். முதுமை அடைந்து
வந்த உழவன் வயதின் முதிர்ச்சியால்

முடியும் தாடியும் முழுதும் நரைத்து
உடலும் தளர்ந்து ஒளிக்கண் குறைந்து
கூனிய உடலுடன் கோலிரண் டூன்றித்
தளர்ந்து நடந்துதன் னாடியே வந்து
மன்னன் முன்பணி வாகநின் றனனே.

நின்றவன் தன்பால் மன்னன்
நீட்டினன் தானி யத்தை
நன்றெனக் கிழவன் வாங்கி
நயனத்தால் காணும் சக்தி

குன்றிய தாலே கையில்
கொண்டதைத் தடவிப் பார்த்தான்
மன்றல்செய் மாலை மன்னன்
கிழவனை மகிழ்ந்து நோக்கி

"கிழவா! இத்தானி யத்தின்
வரலாற்றை விளக்கு வாயா?
உழவினால் விளைந்த துண்டா?
உனக்கிது போல் விலைக்குப்
பழமையிற் கிடைத்த துண்டா?
பயிர் செய்ததேனு முண்டா?
அழகான இதனைப் பற்றி
அறிந்தன கூறுக" என்றான்

வேந்தனின் கேள்வி காதில்
விளக்கமாய் விழவே யில்லை
ஆந்துணை சிறிது நேரம்
ஆழ்ந்து சிந்தித்துப் பின்னர்
"எந்துமித் தானியம் போல்
யான் விளைத்தெடுத்த தில்லை
மாந்தர்கள் விலைக்கு விற்க
வாங்கின நினைவு மில்லை

விலை கொடுத்தடைந்த தான்ய
விதைக ளெல்லாமிக் கால
நிலையினில் உள்ளதே போல்
சிறிதென்றே நினைக்கின்றேன் யான்

மலைவறத் தானி யத்தின்
வரலாறு தெரிய வேண்டின்
நலமிகும் எனது தந்தை
தனையழைத் தறிவீர்! நன்றே"

என்னும் சொல்லை மன்னன் கேட்டு
வேலை யாட்களை விரைந்து கூவிக்
"கிழவனின் தந்தையை அழையுமின்!" என்ன
'நன்றெ'ன விரைந்து சென்ற சேவகர்
மற்றொரு கிழவனோ டுற்றனர் மகிழ்ந்தே

வந்த கிழவன் வயதா னவனாய்க்
கூனைப் படினும் கைத்தடி ஒன்றே
ஊன்றி வந்தங் குற்றது கண்ட
மன்னன் தானிய மணியை அவனிடம்
காட்டினன் கிழவன் கண்களோ அதனை
உற்று நோக்கின ஒளிபடைத் ததனால்
மன்னன் அவனை மகிழ்வுடன் பார்த்து
"என்ன கிழவா! இதுபோல் தானியம்
எங்கே விளைவ தென்பது தெரிந்தால்
அன்பு கூர்ந்துநீ அறிவிப் பாயா?

எந்நா ளாவது இம்மணி போன்றதை
விலைக்கு வாங்கிய துண்டெனில் விளம்புவாய்
உரியநின் வயலில் பயிரிட் டிருப்பினும்
சொல்லுக! அதனை வல்லவா றெமக்கே"

என்றே மன்னன் இயல்புடன் கேட்க
கிழவன் செவிகள் கேள்வியிற் சிறிது
மந்தமா யினுந்தன் மைந்தனை விடத்தான்
நன்கு கேட்கும் நலமிகப் படைத்தவன்
ஆதலின் மன்னனுக் கவன்விடை பகர்வான்

மன்னவ னேகேளாய்! — இதுபோல்
மாபெருந் தானியத்தை
என்னுடைய நிலத்தில் - விதைத்து
எடுத்த தில்லையயா!

ஆசை மிகுதியுடன் - உழைக்கும்
அந்தநற் காலத்திலே
காசுகள் என்பதையே - கண்ணில்
கண்டது மில்லையையா!

ஆதலின் எதையும் —விலைக்கு
அடைந்த தில்லையையா!
போதியதாம் பொருள்கள் —விளைத்துப்
போற்றி வருவோமையா!

தேவைக்குரிய பண்டம் —மாற்றுச்
செய்து கொள்வோமையா!
மேவுமித் தானியந்தான் —எங்கு
விளைந்த தென்றறியேன்.

தற்கால விளைவால் —கிடைக்கும்
தானிய மாவைவிட
முற்கால விளைவின் —அளவு
மிகுதி என்றுரைப்பார்!

அந்தநாள் தானியந்தான் — பெரிதாய்
அமைந்த தானலும்
இந்தஓர் தானியம்போல் —பெரியதை
எங்குமே கண்டதில்லை!

இந்த ஓர் காலத்திலே —விளைத்து
எடுப்பதைவிடவே
எந்தையர் காலத்திலே —விளைந்தது
இன்னும் பெரியதென்பார்

ஆதலின் எந்தையினை — நீங்கள்
அழைத்துக் கேட்டறிந்தால்
மீதுறும் ஐயமெல்லாம் —தெளிவாய்
விளங்க லாகுமையா!

(தொடரும்)

## திருவள்ளுவர் தமிழி எழுத்துகளில் எழுதிய திருக்குறள்!

புலவர் தாமரைக்கண்ணன், அச்சிறுபாக்கம்,
செங்கற்பட்டு மாவட்டம் 603301

தமிழ்நாடு தொல் பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் டாக்டர் திரு இரா. நாகசாமி அவர்கள், 'கல்வெட்டியல்' எனும் நூலில் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட 'தமிழி எழுத்துகளை' ஆராய்ந்து கி.மு. மூன்றும் நூற்றுண்டு முதல் கி.பி மூன்றும் நூற்றுண்டுவரை அந்த எழுத்துகளே நடைமுறையில் இருந்திருக்க வேண்டும் என்று பல ஆய்வு அறிஞர்களின் முடிவுகளோடு ஒப்பிட்டுத் தம் கருத்தை நிறுவியுள்ளார்.

திருக்குறள் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்ற தற்போதைய கருத்து சரியாக இருக்குமானுல், திருவள்ளுவர், திருக்குறளைத் 'தமிழி எழுத்தில்' (அந்நாளைய தமிழ் எழுத்தில்) தான் எழுதியிருத்தல் வேண்டும்.

திருவள்ளுவர் இப்போது வந்தால், இன்றைய தமிழ் எழுத்தில் உள்ள 'திருக்குறளை'ப் படிக்கத் தெரியாமல் திண்டாடிப் போவார். 'இது என்ன மொழி?' என்று நம்மைக் கேட்பார்.

நாமும், திருவள்ளுவர் எழுதிய 'தமிழி வரிவடிவத்தில்' திருக்குறளைப் பார்த்தால், 'இது எந்த மொழி' என்று தெரியாமல் திகைப்போம்.

கால வெள்ளத்தில், தமிழ் மொழி வரிவடிவத்தில் பல மாற்றங்களைப் பெற்றுலும் கருத்து வெள்ளத்தில் ஆழம் கொண்டிருப்பது நமக்கு மகிழ்ச்சியை உண்டாக்குகிறது.

உலகின் ஒவ்வொரு மொழியும் இப்படிப்பட்ட வரிவடிவ மாற்றத்தைப் படிப்படியாகப் பெற்றிருப்பதை மொழி நூல் அறிஞர்கள் தெளிவாக ஆராய்ந்து பொதுமக்களுக்கு விளக்கினுல் நல்லது. 'தமிழி எழுத்துக்களில்' மெய்யெழுத்துக்களுக்குத் தலைப்பில் புள்ளியில்லாமை கவனிக்கத்தக்கது.

தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறை நடத்திய கோடைக் காலப் பயிற்சியில், கல்வெட்டுப் பயிற்சி பெற்றவன் என்ற தகுதியுடன் இதனை நான் எழுதியுள்ளேன். இது பற்றிய தங்கள் மேலான கருத்துகளைச் சான்றோர் எனக்குத் தெரிவித்தால் நன்றி உடையவனாக இருப்பேன்!

---

*குறள் எழுதப்பட்ட காலத்தில் வழக்கத்தில் இருந்ததாகக் கூறப்படும் 'தமிழி' எழுத்தில் (அதிகாரம்-1) கடவுள் வாழ்த்துப் பகுதியின் 100 குறட்பாக்களையும் இக் கட்டுரையின் ஆசிரியர் எழுதி, அது அமுதசுரபி-ஜனவரி'79 இதழில் வெளியாகி உள்ளது

# வர்ணனை மரபுகள் *

உயர்திரு. எஸ். வையாபுரிப்பிள்ளை B. A., B. L.

பண்டைத் தமிழாசிரியர்கள் தங்கள் இலக்கியங்களிலே பல வகையான மரபுகளைக் கையாண்டுள்ளார்கள். கோவைப்பிரபந்தத்தைக் கலித்துறையிலும், உலாவைக் கலிவெண்பாவிலும், அந்தாதியை 30 அல்லது 100 செய்யுட்களிலும் பாடினர். இந் நியமங்களெல்லாம் மரபுகளாக முதிர்ந்துவிட்டன. ஒருபொருள் பற்றி ஒன்றிற்கு மேற்பட்ட மரபுகள் வருதலும் காணலாம். அந்தாதியில் இடையிடையே அகப்பொருட் கருத்துக்கள் வருதல் மரபின்மேல்மரபு. இவ்வாறே இலக்கியம்பற்றிப் பலபல மரபுகள் உண்டென்பதை எளிதில் உணரலாம். இம்மரபுகளை மாற்றியமைக்க இலக்கிய ஆசிரியர்கள் பெரும்பாலும் துணியமாட்டார்கள்.

ஆனால், இதினின்று, ஒருகாலத்தில் ஏதேனும் ஒரு காரணத்தால் உண்டாகிய மரபு, பின் எக்காலத்தும் மாருமல் ஒருபடித்தாய் இருக்குமென்று கொள்ளுதல் சரியன்று. மாறிக்கொண்டே செல்வது தான் உலகஇயல்பு. இலக்கிய மரபும் மாறத்தான் செய்யும். தற்காலத்தில் நமது கண்ணெதிரே மரபுமாற்றம் நிகழ்கிறது. பழைய செய்யுள் வகைகள் மறைந்து வருகின்றன. மறுமலர்ச்சிக் கவிஞர்கள் சிந்துவகைகளை இயற்றித் தமது கவித்வத்தைப் புலப்படுத்தி வருகின்றனர். இவர்களுக்கு வழிகாட்டியாய் விளங்கிய தேசீயகவிபாரதியும், சிந்துவகைகளையே பெரும்பாலும் பேணியிருக்கின்ருர். இப்பொழுது காதற்பொருள்களைக் கலித்துறை முதலியவற்றிற் பாடும் மரபு நின்றுபோய்விட்டது. கண்ணன்பாட்டு முதலியவற்றிற்போன்று சிந்துவகைகளிற் பாடும் மரபு தோன்றிவிட்டது.

இலக்கியங்களில் வரும் வர்ணனைகளில் இங்கே கூறியன போன்ற மரபுகள் எவையேனும் உளவா? வர்ணனையின் இயல்பைச் சிறிதுநோக்குவோம்.

யாதேனும் ஒருபொருளை, அதன் பலதிறப்பட்ட இயல்புகளையும் அறிவு எளிதிற் பற்றுமாறு, அழகும் சுவையும்பட விவரித்துக் கூறுவதுதான் வர்ணனை. வர்ணம் என்ருல் நிறம் அல்லவா?

---

*சென்னை வானொலி நிலையத்திலிருந்து தமிழிலக்கிய மரபுகள் என்ற வரிசையில் 31—10—49-இல் ஒலிபரப்பப்பட்டது. 1950-ஆம் ஆண்டு செந்தமிழ்த் தொகுதி 46-இல் வெளியிடப்பட்டது,

இதிலிருந்து விவரிக்கப்படும் பொருள் அழகுற்றுச் சோபிக்கும்படி வர்ணனை அமைதல் வேண்டும் என்பது பெறப்படுகிறது. இப்படி வர்ணித்தற்குரிய பொருள் எத்தனை வகைப்படுமென்று நாம் தெரிந்து கொண்டால், மரபுகளைப் பற்றியும் ஒருவாறு தெரிந்து கொண்டவர்களாவோம். மரபுகளும் அப்பொருள் வகையைப்பற்றித் தானே இருத்தல் கூடும் ?

வர்ணனைப் பொருள் இயற்கையைக் கடந்ததாகவேனும், இயற்கையில் அடங்கியுள்ளதாகவேனும் இருக்கலாம். இயற்கையைக் கடந்த பொருள் வகையில் சிவன், விஷ்ணு முதலிய தெய்வங்களும் பூத பைசாசங்களும் உட்படும். இயற்கையில் அடங்கிய பொருள் வகையில் சூரியன் சந்திரன் முதலிய தெய்வமாகக் கருதும் இயற்கைப் பொருளும், விலங்குகள் பறவைகள் முதலிய உயிருள்ளனவும், மலை மரம் முதலிய உயிரில்லனவும், காலதேசவர்த்தமானமும், மக்களினமும் அமையும். மக்களினத்தில் உருவம் பற்றியும் மனம் பற்றியும் வர்ணனைகள் நிகழலாம். காலதேசவர்த்தமானமும் வர்ணனைப் பொருள்களேயென்று 'மலைகடல் நாடு வளநகர் பருவம்' எனப் பெருங்காப்பியத்தின் இயல்பைக் கூறும் தண்டியலங்காரமும் உணர்த்தும்.

எப்பொருள் பற்றி நிகழ்ந்தாலும், வர்ணனை அப்பொருளை வியக்தமாய் வரையறைப்படுத்தி உணர்த்துவதற்கும், அதனைச் சித்திரித்து மனத்தில் நிறுத்துவதற்கும் உதவுதல் வேண்டும். இங்ஙனம் செய்தற்குரிய பலவகைச் சூழ்நிலைகளையும் ஆசிரியன் அமைத்தல் இன்றியமையாததாம். காலம், இடம், வடிவு, நிறம், மனநிலை, இங்கிதம், இயக்கம், செய்கை முதலியவற்றால் இச்சூழ்நிலை அமையும்.

இனி, வர்ணனைப் பொருள்களை நோக்குவோம். இவற்றுள் இயற்கையைக் கடந்த பொருளாகிய தெய்வம், பூத பைசாசம் முதலியவற்றை வர்ணிப்பதில், மரபு ஒரு முக்கிய விஷயமாகவே அமைந்து விடுகிறது. ஒரு தலைவன் ஒரு தலைவியை ஒரு சோலையிலே எதிர்ப்படுகிறான். தலைவி அழகிலே மிகச் சிறந்து விளங்குபவள். அவள் தெய்வப் பிறப்பினளோ மானுடப் பிறப்பினளோ என்று தலைமகன் ஐயுறுகிறான். பின்னர்த் தெய்வமாயின் இன்னின்ன இயல்புகள் இருத்தல் வேண்டும்; அவை இல்லாமையால் மக்களினத்தாளே என்று துணிகிறான். இங்கே தெய்வ வர்ணனையிலே சில மரபுகளைத் தொல்காப்பியர் தந்துள்ளார். அவைசூடிய பூவில் வண்டு மொய்த்தல், கண் இமைத்தல், அஞ்சுதல் முதலியவை. கால் நிலந்தோய்தல், வியர்த்தல், நிழலாடுதல்

முதலியவற்றையும் உரைகாரர் சேர்த்துக் கூறுவர். இது தெய்வப்பிறப்பிற் குரிய பொதுவியல்பு. இவ்வியல்புகள் கோவைப் பிரபந்தங்கள் அனைத்திலும் புகுந்து அவை மரபுவழிப்பட்டன என்பதை உணர்த்துகின்றன.

இனி, தெய்வகணத்தினரை நோக்குவோம். உதாரணம்: கந்தர்வர்கள். இவர்கள் ஆணும் பெண்ணுமாக இருவராய்த் திரிவரென்றும், எப்பொழுதும் வீணையைத் தரித்திருப்பரென்றும் இவர்களுள் ஒருவனும் ஒருத்தியும் தாமே எதிர்ப்பட்டுக் காதல்வசமாய்க் கலந்து கூடுவரென்றும் கூறுதல் மரபு. இம்மரபுகளைக் கொண்டே தொல்காப்பியர் 'துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே' என்றனர். சங்க காலத்துச் செய்யுளிற்காணும் இயற்கைக் காதல் நிகழ்ச்சிகளைக் கந்தர்வ மணத்தோடு இயைத்துப் பின் அவர்களுக்குரிய மரபுகளைக் கொண்டு அக் காதற் செய்யுட்களை விளக்க முற்பட்டு அவற்றைச் செயற்கைமயமாய் நெறிப்படுத்தினர் சில ஆசிரியர்கள். இவ்வாறு முதன்முதற் செய்தவர்களுள் ஒருவர் தொல்காப்பியர்.

இனி, தெய்வங்களைத் தனித்தனி நோக்குவோம். இத்தெய்வங்களை வர்ணிக்கும் பொழுதும், மரபுபற்றிச் சில விவரங்கள் தருதல் வழக்கமாயிற்று. உதாரணமாக, சரஸ்வதிதேவியை அவள் வெள்ளை வஸ்திரம் தரித்து, ஒள்ளிய ஆபரணங்களையணிந்து, கையில் வீணை, புத்தகம் முதலியவற்றைத்தாங்கி, வெள்ளைத் தாமரையில் அமர்ந்திருப்பதாக வர்ணிப்பது மரபு. இங்ஙனமே ஒவ்வொரு தெய்வத்தைப் பற்றியும் வர்ணனைகள் மரபு தவறாமல் இலக்கியங்களில் வருகின்றன.

தெய்வங்களைப் போலவே இயற்கையைக் கடந்த பிற பொருள்களும் மரபுபற்றியே வர்ணிக்கப்படும். அரக்கர்கள் வக்ரதந்தம், செங்கண், செம்பட்டைமயிர் முதலியன உடையராய்க் கொடிய இயல்பு கொண்டவராய் வர்ணிக்கப்படுவார்கள். இவ்வாறே சுவர்க்கம், நரகம் முதலிய கற்பனைப் பிரதேசங்களும் மரபுபற்றியே வர்ணிக்கப்படும்.

இயற்கையில் அடங்கிய பொருள்களை ஓரறிவுமுதல் ஆறறிவுவரை உள்ளனவாகக் கொண்டு வர்ணிப்பர். தொல்காப்பியர் இப்பாகுபாட்டினைத் தந்துள்ளார். புல்லும் மரமும் ஓரறிவின. நந்து ஈரறிவுயிர். சிதல் எறும்பு மூவறிவின. நண்டு தும்பி நாலறிவின. விலங்கும் பறவைகளும் ஐயறிவின. மக்கள் ஆறறிவினர். இம்மரபிற்பிழையாமல் வர்ணனைகள் நிகழ வேண்டுமென்பது தொல்காப்பியர் கருத்து.

மரபுபற்றி நாம் முக்கியமாகக் கவனிக்கவேண்டுவது மக்களின மாம். நமது தேசத்தில் மக்களை நாற்பெருஞ்சாதியாகப் பண்டைக்காலத்தவர் வகுத்தனர். ஒவ்வொரு சாதியாருக்கும் சிற்சில இயல்புகள் சிறப்பாக உரியன என்று கொண்டார்கள். இவ்வியல்புகளிற் பிறழாமல் மக்கள்—வகுப்பினரை வருணித்தலே மரபு. அந்தணர், பூணூல் கரகம் முதலியவை உடையரென்றும், அரசர் செங்கோல், குடை, முரசு, கிரீடம் முதலியவை உடையரென்றும், வைசியர் வாணிகம் செய்பவரென்றும், வேளாளர் உழுதொழில் செய்பவரென்றும் தொல்காப்பியர் மரபு வகுத்துள்ளனர். இவர் விதித்துள்ளபடியே மரபுகளைப் பிற்காலத்தவர்களிற் பெரும்பாலோர் வழங்குவர்.

சாதி இங்ஙனமாக, மக்களுள் ஆண்பாலரிற் சிறந்தார் பெருமையும் அறிவாற்றலும் உடையரென வர்ணிப்பது மரபு; பெண்பாலரிற் சிறந்தார் அச்சம் நாணம் மடம் பயிர்ப்பு என்ற நான்கு குணங்களும் உடையரென வருணித்தல் மரபு தொல்காப்பியரே இம்மரபினைத் தமது நூலிற் குறித்துள்ளார்.

பெண்பாலர்பற்றிய வர்ணனை தமிழிலக்கியத்தில் மிக அதிகமாகப் பயின்று வருகிறது. உலாப் பிரபந்தங்களில் இவ்வர்ணனைகள் விரிவாக முதன்முதலில் வந்தனபோலும்! சேரமான் பெருமானது ஆதியுலா உதாரணம். பின்பு காவியங்களிலும், விறலி விடு தூது முதலிய பிரபந்தவகைகளிலும் வழங்கத் தலைப்பட்டன. இவற்றுள்ளும் உறுப்புவர்ணனை முறையாயன்றிக் கவிஞனது மனோபாவனை சென்றபடி நிகழ்ந்தது. பிற்பட்ட நூல்கள் ஒரு மரபினை மேற்கொண்டு உறுப்புக்களனைத்தையும் முறையே வருணித்தன. சீவக சிந்தாமணி நாமகளிலம்பகத்தில் விசயமாதேவியின் வர்ணனை இங்கே குறிப்பிடத்தக்கது. இராமாயணத்திற்கூட இம் முறைபற்றிய வர்ணனையைக் காணலாம். நாடவிட்ட படலத்தில் இராமன் அனுமானுக்குச் சீதையை அடிமுதல் முடிவரை வர்ணித்துக் கூறும் பகுதியே உதாரணமாகும் மிகப் பிற்பட்ட காலத்தில் இவ்வாறு அடிமுதல் முடிவரையும், முடிமுதல் அடிவரையும் வர்ணிக்கும் தனிப் பிரபந்தங்களே தோன்றிவிட்டன. இவற்றை முறையே பாதாதிகேசமெனவும் கேசாதிபாதமெனவும் பெயரிட்டு ஆசிரியர்கள் வழங்கினர். பதின்மூன்றும் நூற்றுண்டில் தோன்றிய வெண்பாப் பாட்டியலில் இரண்டு பிரபந்தங்களும் விளக்கப்பட்டுள்ளன. இம்மரபு தற்காலத்தில் ஒழிந்து விட்டது. இதை ஒரு பெரிய நன்மையென்றே சொல்லவேண்டும்.

உறுப்புப் பற்றிய வர்ணனை இவ்வாறாக, மனம் பற்றிய வர்ணனையை இனிக் கவனிப்போம்.

மனநிகழ்ச்சிகளை அவற்றிற்குரிய சொற்களாலேயே வர்ணித்தல் முதலாவது கூறத்தக்கது. மதுரைக்காஞ்சியில் அறங்கூறும் அவை-யத்தைப்பற்றி,

'அச்சமும் அவலமும் ஆர்வமும் நீக்கிச்
செற்றமும் உவகையும் செய்யாது காத்து'

என வருகின்றது. இங்கே மனநிகழ்ச்சிகள் அவற்றிற்குரிய சொற்-களாலேயே கூறப்படுதல் காணலாம்.

இரண்டாவது : மனநிகழ்ச்சிகளை அவற்றின் குறியாகச் சரீரத்தில் தோன்றும் மெய்ப்பாடுகளால் வர்ணித்தல், பேகனது மலையைப் பாடினனிடத்து அவன் மனைவியாகிய கண்ணகி வருந்திக் கண்ணீர் விட்டு விம்மி அழுதாள் என்று சொல்லப்படுகின்றது. கண்ணீர்விடுதல் முதலியன மெய்ப்பாடுகளாகும். இம்மெய்ப்பாடுகளாற் கண்ணகியினது துன்பநிலை உணர்த்தப்படுகிறது. மெய்ப்பாடுகள் பற்றிப் பலநாடக மரபுகள் பண்டையுரைகளில் மேற்கோளாகத் தரப்பட்டுள்ளன. இலக்கிய ஆசிரியர்கள், மரபுவழிப்பட்ட இம்மெய்ப்பாடுகளின் மூலமாய் மனநிகழ்ச்சிகளை உணர்த்திவந்தனர். ஆனால் இவ்வகை மெய்ப்பாடு-களில் மனநிகழ்ச்சிகள் அனைத்தும் அமைந்துவிடுமென்று நினைத்தல் தவறாகும்.

மூன்றாவது : மனநிகழ்ச்சிக்குக் காரணமானவற்றைக் கூறுதலால் அந்நிகழ்ச்சிகளை வர்ணித்தல். அதிகமான் நெடுமானஞ்சி இறந்த பொழுது அவன் தமக்குச் செய்துவந்த அன்புச் செயல்களை நினைத்து நினைத்து ஔவையார் வருந்துகிறார். துன்பமாகிய மன நிகழ்ச்சியை மிகுதிப்படுத்தும் அன்புச் செயல்களின் மூலமாய் அந்-நிகழ்ச்சி உணர்த்தப்படுகிறது.

நான்காவது: மன நிகழ்ச்சியின் விளைவாகக் கருதப்படுவனவற்றின் மூலமாய் அந்நிகழ்ச்சியை வர்ணித்தல். ஒல்லையூர்ச் சாத்தன் மாய்ந்த-பின், அவன் பொருட்டு இரங்கிப் பாடும் புலவர் ஒருசில விளைவுகள் நிகழலாமென்று தமது மனத் துன்பத்தால் கருதுகிறார் இவ்விளை-வின் மூலமாக மனநிகழ்ச்சியை வர்ணித்து 'முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே' என இரங்குகிறார்.

ஐந்தாவது: இயற்கையே மனநிலைக்கு ஒத்து நிகழ்வது போலக் கூறி மனநிலையை உணர்த்தல். இது கவித்வ இயல்புகள் சிறந்து வளர்ந்த பிற்பட்ட காலத்தில் நிகழ்ந்ததெனவே கொள்ளுதல் வேண்டும். சிலப்பதிகாரத்தில் துன்பமாலையில் கண்ணகி,

'பாய்திரை வேலிப் படுபொருள் நீயறிதி;
காய்கதிர்ச் செல்வனே! கள்வனோ என்கணவன்?'

என்று சூரியனை வினவ,

'கள்வனோ! அல்லன்; கருங்கயற்கண் மாதராய்!
ஒள்ளெரி யுண்ணும்இவ் வூர்என்ற தொருகுரல்'

இராமாயணத்தில் வஞ்சகக் கருத்தோடு இராவணன் முனி வேடங் கொண்டு சீதையிருக்கும் பர்ணசாலையில் வந்து இருந்த பொழுது,

'நடுங்கின மலைகளும் மரனும்; நா அவிந்து
அடங்கின பறவையும்; விலங்கும் அஞ்சின;
படங்குறைந் தொதுங்கின பாம்பும்; பாதகக்
கடுந்தொழி லரக்கனைக் காணும் கண்ணினே'

என்று இயற்கை பரிதாபிக்கின்றது. இவை மரபிற்குத் தக்க உதாரணங்களாம்.

இவை போன்ற வர்ணனை — மரபுகள் தமிழிலக்கியத்திலே பல உள்ளன. சில மரபுகள் ஒழிக்கத்தக்கன. புது மரபுகள் அமைத்துக் கொள்ளற்பாலன. இந்நெறியிலே தமிழிலக்கிய ஆசிரியர்கள் பயில வேண்டுவது அவசியமாகும்.

# அன்பின் ஆற்றல்

பழனி. அரங்கசாமி, எம். ஏ., பி. ஓ. எல்.,
மதுரைப் பல்கலைக்கழகம்

மனித வாழ்க்கை வளமாக அமைதல் வேண்டும். மனிதன் உயிர் வாழ்வதற்கு, புறத்தூய்மையோடு இருத்தற்கும் காற்று, நீர், உணவு ஆகிய மூன்றும் தேவை. அதே போன்று அகத் தூய்மைக்கும் இக வாழ்க்கைக்கும் அவனுக்கு வேண்டிய மூன்று இன்றியமையாப் பண்பு நலன்கள் அன்பு அறிவு ஆற்றல் என்ற மூன்றுமேயாகும். இம்மூன்றனுள்ளும் மிகச்சிறந்ததான அன்பின் ஆற்றல் கல்லையும், மண்ணையும் கூடக் கனிவிக்கும். புல், பூண்டு, புழு, பூச்சி ஆகிய உயிர்ப் பொருள்களையும் அது தன் வயப்படுத்தும் தலையாய பண்பாகும். சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி தீயெனப் பரவி அனைத்தையும் அழிக்கும். தற்கால மருத்துவ இயலார், பொங்கி வரும் சினம் விஞ்சிய இரத்த அழுத்தத்தையும், மார்பு அடைப்பினையும் உண்டு பண்ணும் கொடிய இயல்பாகும் என்று கூறுவர். அன்பென்னும் பண்பே சினத்தைத் தவிர்க்கும்; செல்லுமிடம் அனைத்தையும் சேமநெறியாக்கும். அன்பின் வயப்பட்டோர் அகில உலகையும் வயப்படுத்தும் ஆற்றல் பெறுவர். அறிவும்,ஆற்றலும் மனித வாழ்க்கைக்குத் தேவைதான் என்றாலும், இன்றியமையாத் தேவை அன்புதான். வடலூர் வள்ளலாரும், "ஆருயிர்கட்கெல்லாம் நான் அன்பு செயல் வேண்டும்". என்று தான் சொல்லுவார். அன்பும் ஆருயிரும் இணை பிரியாத்தவை என்று கருதுவார் போன்று வள்ளுவப் பெருந்தகையும்,

"அன்போ டியைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போ டியைந்த தொடர்பு" என்கிறார்.

இகவாழ்க்கையினை இச்சிக்காது பரலோக வாழ்வுக்கென்று பணியும் தொண்டும் பாங்குறப் புரியும் துறவியர்க்கு வேண்டுவது அருள். அந்த அருளுக்கும் அன்பே தாய் என்பார் வள்ளுவர்.

'அருளென்னும் அன்பீன் குழவி' என்ற இறப் பகுதி இதனை வலியுறுத்தும்.

'அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே' என்று வரும் திருமூலர் வாக்கு அன்பும் ஆண்டவனும் ஒன்று என்ற கருத்தை வலியுறுத்துகிறது. அன்பினால் தான் உயிர் வாழ முடியும்; எனவே இவ்வுண்மையை வளர்த்து உயிரையும் காப்பதற்கு என்பால் அன்பினைப் பெருக்க வேண்டும் என்று தான் தாயுமான அடிகளும்

"அன்பைப் பெருக்கி என் ஆருயிரைக் காக்க வந்த
இன்பப் பெருக்கே இறையே பராபரமே"

என்று வேண்டுவார். 'அனைத்தையும் வெல்லும் ஆற்றல் அன்புக்குத் தான் உண்டு' (Amor vincit omnia) என்று இலத்தீன் மொழியில் ஒரு பழமொழியும் உண்டு.

உண்டும் உடுத்தும் உடனுறைந்தும் பழகுகின்ற சுற்றத்தாரிடம் காட்டுவது மட்டும் அன்பல்ல. இயல்பாக எழுகின்ற இரக்க உணர்வினாலே எந்த மானுட உயிருக்காகவும் காட்டப்படுகின்ற பரிவு, பாசம், பற்று ஆகியன மட்டும் அன்பு அல்ல. அன்பின் மீதூர்ந்த நிலையில் ஊர்வன, பறப்பன மட்டுமன்றிச் செடி கொடிகளிடத்தும் செலுத்தப்படுகின்ற இரக்க உணர்வும், இனிய பண்புமே உண்மையான அன்பாகும். "வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்" என்ற வள்ளலாரின் வாக்கிலே அந்த உயரிய பண்பினைக் காண்கிறோம். நீரின்றி வாடிய பச்சைப் பயிரைக் கண்டதும் வள்ளலாரின் உள்ளமும் வாடியது. இப்படித்தான் கொழு கொம்பின்றித் தவித்த முல்லைக்கொடியைக்கண்டதும் பாரியின் உள்ளமும் வாடியது போலும்!

வலிபுணர் அரக்கனாகிய தென்னிலங்கை வேந்தன் இராமனின் வாழ்க்கைத் துணையை வலிந்தெடுத்துச் சென்றுவிட்டான். கத்தும் தரங்கச் சேதுமுனை தொடங்கிக் கடல் சூழ் இலங்கை வரை கரை காண விரும்பினான் இராமபிரான். மக்களும் மாக்களும் சேர்ந்து அணை கட்டப்பட்டதென்பது உலக வழக்கு. பரணிக்கோர் ஜெயங்கொண்டானும்,

"அணி கொண்ட குரங்கினங்கள் அலைகடலுக்கப்பால்
வரையொன்று காணாமல் மணலெடுத்து மயங்கினவே"

என்று கூறுவார். அப்போது மிகச் சிறிய அணிலும் மணலைக் கவ்விப் போட்டதாகவும், இராமன் அதன் முதுகை வருடியதனால் அதன் மெல்லிய உரோமக் கற்றையில் மூன்று வெண் கோடுகள் தெரிகின்றன என்பதும் உலக வழக்காற்றுக் கதை. இராமகாதையில் அனுமனின் ஆற்றலும் அறிவும் புகழப்படுகின்றன. இவ் வழக்காற்றுக் காதையில் அணிலின் அன்பு போற்றப்படுகிறது.

வரலாறு தழுவிய புறநானூற்றிலும் அன்பின் வலிமையைக் காட்டும் அழகிய காட்சிகள் சில உண்டு. அதியமானுக்கும் தொண்டை-

மானுக்கும் ஏற்பட்ட கொடும்பகை கடிந்து, கடுஞ்சினம் விலக்கிச் சரியான நேரத்தில் சந்து செய்த பெருமை ஔவையார்க்கு உரியது. ஆற்றல் பொருந்திய தமிழ் மன்னர்பால் ஆத்திரம் மீதூர்ந்து சினத்தீ வளர்ந்தது. தமிழ் மூதாட்டியான ஔவையோ அன்பு மழை பொழிந்த காலை அம்மாமன்னர்கள் தத்தம் மறம் தவிர்த்து அறம் காத்தனர். தொண்டைமானிடம் தூது சென்ற ஔவை அதியமானுடைய படைக்கலத்தைப் புகழ்ந்து கூறினும், அவள் உள்ளத்தில் இருந்தது அன்பு தானே! இருவர்மாட்டும் பகைமை தவிர்க்க வேண்டும் என்றது அமைதியின்மீது அவள் கொண்டிருந்த அன்பின் அடிப்படைதானே!

சோழர் குலத்தைச் சார்ந்த நெடுங்கிள்ளியும் நலங்கிள்ளியும் வேறுபட்டு நின்றனர். போரினைத் தவிர்க்க வேண்டும் என்று அவர் தமக்குப் புத்தி புகட்ட வந்த கோவூர்கிழாரின் செய்கை அன்பினால் விளைந்த அருட் செய்கை அல்லவா!

"ஒருவீர் தோற்பினும் தோற்பதுநுங் குடியே
இருவீர் வேறல் இயற்கையும் அன்றே அதனால்
குடிப் பொருளன்று நுஞ்செய்தி கொடித்தேர்
நும்மோ ரன்ன வேந்தர்க்கு
மெய்ம்மலி உவகை செய்யுமிவ் விகலே"

மலையான் என்ற கோவலூர்ச் சிற்றரசனின் பச்சிளங் குழந்தைகளைக் கிள்ளிவளவன் தேர்க்காலில் இட்டுக் கொன்றிருப்பான்.

"களிறுகண்டு அழூஉ மழாஅன் மறந்த
புன்றலைச் சிருஅர் மன்று மருண்டு நோக்கி
விருந்திற் புன்கணோ வுடையர்
கேட்டனை யாயினீ வேட்டது செய்ம்மே"

என்று கோவூர்கிழார் அறிவு கொளுத்தியிராவிட்டால், மன்னன் மாறாத பகையும் தீராத பழியும் அடைந்து வரலாற்றைக் களங்கப்படுத்தியிருப்பான். அவனை அந்தப்பழியிலிருந்து காப்பாற்றியது குழந்தைகளின்பால் கோவூர்கிழார் கொண்ட அன்புதானே!

நூற்றைம்பது ஆண்டுகள் இந்திய நாட்டைச் சொந்தம் கொண்டாடிச் சூறையாடியவர் வெள்ளையர். அந்த வெள்ளைப் பரங்கியர் இந்த நாட்டை விட்டுப்போக வேண்டும்; அவர்கள் வெளியேற்றப்பட வேண்டும் என்பதில் யாருக்கும் வேறுபாடில்லை. ஆனால்

எப்படி வெளியேற்றுவது? அரசியலறிவும், அந்நியப் படையின் ஆற்றலும் கொண்டு வெள்ளேயரை வெருட்டியே தீருவேன் என்று வியூகம் வகுத்துப் போரிட்டவர் நேதாஜி. அறிவுணர்வோடும் அன்புள்ளத்தோடும் வெள்ளேயரை விட்டுங்கு அனுப்பியவர் காந்தியடிகள். இந்திய விடுதலைப் போரில் ஆற்றல் தோற்றுப்போக அன்பே வென்றது. அனைத்தையும் வெல்லும் ஆற்றல் அன்புக்கு உண்டென்பது தான் வள்ளுவரின் கோட்பாடு. வாழ்க்கையில் அன்பில்லையானுல், எத்துணைச் சிறந்த வாழ்க்கையாக இருந்தாலும் பயன் இல்லை.

''அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரம் தளிர்த்தற்று''

உலக வரலாற்றின் புகழ் மணக்கும் ஏடுகளில் அலெக்சாந்தர், நெப்போலியன் போன்ற அறிவுடையோரும், ஆற்றலுடையோரும் இடம் பெற்றுள்ளனர். பிரெஞ்சு நாட்டு மாவீரன் நெப்போலியன் பதினெட்டாம் நூற்றுண்டின் கடைசிக் காலத்தில் ஐரோப்பியப் பெருநிலத்தை ஆட்டிப் படைத்தவன். அவனது தோள் வலிமைக்கும் வாள் வீச்சுக்கும் வாட்டர்லூ என்ற இடத்தில் கடுஞ்சோதனை வந்தது. ஆங்கிலத் தளபதி வெல்லிங்டன் நெப்போலியனின் இராணுவ முற்றுகைக்கும், நேரடித் தாக்குதலுக்கும் ஐரோப்பிய மண்ணில் முற்றுப்புள்ளி வைத்து விட்டான். எகிப்திய நாட்டிலே அவன் எண்ணியவாறு வெற்றி பெற்றிருப்பானேயானுல், ஆசியப் பெருநிலத்தையும் தனது அடிபணியச் செய்திருப்பான் என்பது வரலாற்றின் மதிப்பீடு. கிரேக்க நாட்டு மாபெரும் வீரனுகத் திகழ்ந்த அலெக்சாந்தர் களம் புகுந்து போராடிய மாவீரர்; ஏட்ரியாடிக் கடல் தொடங்கி இந்தியப் பெருநிலம் வரை விரிந்து பரந்த கிரேக்க சாம்ராஜ்யத்தைத் தமது முப்பத்திரண்டாம் வயதிலேயே நிறுவியவர்; கிரேக்க அறிஞன் அரிஸ்டாட்டிலின் மாணவனுக வந்து அறிவியலையும் தத்துவத்தையும் பயின்ற அலெக்சாந்தர் தலைசிறந்த சிந்தனையாளராகவும் திகழ்ந்தவர். நெப்போலியன், அலெக்சாந்தர் போன்ற மாவீரர்களின் சாகாத வாழ்க்கையினைச் சரிதங்கள் பேசும். இவர்களுக்கு இடமளித்த வரலாற்று ஏடுகள்தாம் ஏசுவுக்கும், சாக்ரட்டீசுக்கும் சிறப்பிடம் கொடுத்துள்ளன.

குத்துகின்ற முள்ளைத் தலையிலேந்திக் குருதி சொட்டச் சொட்ட ஆணியாலே அறையப்பட்டுச் சிலுவையிலே மாண்டவர் இயேசு. ஐந்தாம் நூற்றுண்டின் கிரேக்க இளைஞர் உலகத்தை சிந்திக்கத்

தூண்டியவர் சாக்ரட்டீஸ். திறமையில்லாதவரும், அனுபவமற்றோருங் கூட ஜனநாயகத்தில் புகுந்து விடுதற்கு வாய்ப்பு உண்டு என்று கூறிக் கிரேக்க நாட்டு மக்களாட்சியில் மாற்றம் கொண்டுவர விரும்பியவர் சாக்ரட்டீஸ். கோணல் புத்தி படைத்த ஏதென்ஸ் நீதி மன்றம் அவரைக் குற்றவாளிக் கூண்டிலேற்றி நச்சுக் கோப்பையைப் பரிசு அளித்தது. புன்முறுவலோடு அதனை அருந்தி இம்மண்ணுலகை விட்டுச் சென்றார் அம்மாபெரும் ஞானி. நெப்போலியனையும் அலெக்சாந்தரையும் பற்றிப் பேசுவதோடமைகின்ற இவ்வுலகம் ஏசுவுக்கும் சாக்ரட்டீசுக்கும் தலைவணங்கி வாழ்த்துகிறது. இவர்களின் அன்புள்ளம் தான் 'பகைவனுக் கருள்வாய் நன்னெஞ்சே' என்று பதினெட்டாம் நூற்றாண்டில் பாரதியைப் பாடுமாறு செய்துள்ளது என்று கூடச் சொல்லலாம்.

அகில உலகத்தையும் படைத்த ஆண்டவனின் அருளுங்கூட அறிவுக்கும் ஆற்றலுக்கும் கிடைப்பதில்லை. அன்புக்குத்தான் ஆண்டவனும் கட்டுப்படுகிறான். "அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே" என்ற ஆன்றோர் வாக்கும் இதனைத்தான் வலியுறுத்தும். ஆற்றலும் அறிவும் மீதூர்ந்த இராவணன் ஒரு காலத்தில் இறைவன் உறைகின்ற கயிலாய மலையைப் பெயர்த்தெடுக்க முனைந்தான். அன்புருவாக விளங்கும் சிவன் என்னும் செம்மான் அருளாலே புத்தி புகட்டினான். இராவணின் புன்னெறி போக்கி நன்னெறிப் படுத்திய கதையைச் சம்பந்தர் தேவாரம் மிக அழகாகச் சொல்லுகிறது.

'அஞ்சாதே கயிலாய மலை எடுத்த அரக்கர் கோன் தலைகள் பத்தும்
மஞ்சாடு தோள் நெரிய அடர்த்து அவனுக்கு அருள்புரிந்த மைந்தர் கோயில்'

அன்பில்லாத அறிவு ஆணவத்தையும், அகங்காரத்தையும் செருக்கையும் தூண்டிவிடும். அன்பில்லாத ஆற்றல் முரட்டுத் தன்மையையும், விவேகமில்லாத வீரத்தையும் வளர்க்கும். எனவே மக்கள் வாழ்க்கை வளமாக அமைதல் வேண்டுமாயின், அறிவையும், ஆற்றலையும்விடச் சிறந்ததான அன்புக்கு முதலிடம் கொடுத்தல் வேண்டும் என்பது தெளிவு.

# சேது மன்னரின் செந்தமிழ்த் திறம்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

மன்னர் வினவும் சதாவதானி சரவணப் பெருமாள் கவிராயர் விடையும்

துஞ்சுவரை மூட்டை துளைக்கச் சுகங்கொடுக்கும்
பஞ்சணையை மோதுவதென் பாவலவா—வஞ்சகரைச்
சேர்ந்தவரு மன்னவர்தந் தெண்டனைக் குளாவதுபோல்
சார்ந்ததனல் வந்தவினை தான்.

2. ஆரமணி வேணி யரனூர் கிளியேறு
மாரனைக் கண்ணாலெரித் தவாறென்னே—
யாரழலில்
வீழ்ந்தா ருய்வாரோ விளக்கில்விழும் விட்டிலுயிர்
வாழ்ந்ததுண்டோ தேவை மன்னவா.

கவிராயர் வினவும் மன்னர் விடையும்

1. வாரியகை நீரையொரு மாதுகண்டு திண்கரையிற்
சேரவிட்டுத் தேடியதென் தேர்வேந்தே—யூரியுலாம்
மச்சமிரண்டு கையில்வந்து சிக்கிற்றென் றுள்ளத்தின்
மெச்சிக் களித்து விரைந்து.

2. மாரன் சிலைவளைத்தும் வாளியொன்றும் பூட்டாமல்
வீரமடங் கியதென் வேல்வேந்தே—சேருமலர்த்
தோடலருங் கூந்தலருஞ் சுந்தரரும் பஞ்சணையி
லூடலற மேவ லுணர்ந்து

முற்றும்.

## செய்திக்கதிர்

தேசிய நூல்

மதுரை மாநகராட்சிக் கூட்டத்தில் கடந்த சனவரித் திங்கள் இறுதி வாரத்தில் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானம் நமது பாராட்டுக்கு உரியதாகும். தேசியக்கொடி, தேசியமொழி, தேசியப் பறவை என்றிருப்பதுபோல் தேசியநூலாகவும் ஒரு சிறந்தநூலை அரசினர் அறிவிக்கவேண்டும். சாதி, மதம், இனம் ஆகிய வேறுபாடு-கள் இன்றி, உலகளாவிய கண்ணோட்டத்தில் வள்ளுவரால் அருளிச் செய்யப்பட்ட அருந்தமிழ்ப் பெரும்பனுவலாகிய திருக்குறள் இதற்கு

முற்றிலும் பொருத்தமானதே ஆகும். திருக்குறளைத் தேசியநூலாக அறிவித்தல் வேண்டும் என்று பல்வேறு இலக்கிய மேடைகளில் தொடர்ந்து வற்புறுத்தி வருபவர் குன்றக்குடி அடிகளார் ஆவார். தீர்மானத்தை நிறைவேற்றியதோடன்றி, மீண்டும் அரசினரை வற்புறுத்தி இதனைச் செயற்படுத்துவது மாநாராட்சியின் இன்றியமையாத பணியாகும்.

## ஈழத்துத் தலைவரின் இந்திய வருகை

இலங்கைவாழ் இந்தியர்கள் குறிப்பாகத் தமிழர்கள் பல்லாயிரக் கணக்கில் அங்குத் தோட்டத் தொழிலாளிகளாகஇருந்து வருகின்றனர். இந்தியப் பெருநிலப்பரப்பையும், ஈழத்தையும், பர்மாவையும் ஒன்றுக வைத்து ஆட்சி நடாத்திய வெள்ளையர்கள் காலத்தில் இவர்களின் முன்னேர் அங்கே போய்ச் சேர்ந்தவர்கள். தொடர்ந்து நிகழ்ந்த அரசியல் மாற்றங்களினுல் பாதிக்கு மேற்பட்ட தமிழ் மக்கள் அங்கிருந்து வெளியேறி இந்தியாவுக்குத் திரும்பி வருகின்ற நிலை ஏற்பட்டுள்ளது. நிரந்தரமாகக் குடியேறி அங்கே வாழ்கின்ற தமிழ் மக்களும் மாற்ருந்தாய் மனப்பான்மையில் நடத்தப்படுவதை எதிர்த்துப் போர்க்குரல் கொடுக்கின்ற முன்னணித் தலைவர்களில் ஒருவராக விளங்குகின்ற உயர்திரு. அ. அமிர்தலிங்கம் அண்மையில் தமதுதுணைவியாருடன் மதுரைக்கு வந்திருந்தார். நகரமக்கள் சார்பில் சிறந்த வரவேற்பு அளிக்கப்பட்டது. இலங்கையில் தமிழர்களுக்கென்று தனி நாடு வேண்டும் என்று தமது புரட்சிக் குரலை உயர்த்தி, ஈழத்து அரசியல் மேடைகளில் ஒரு கலகலப்பை ஏற்படுத்தியுள்ள இந்தத் தமிழ்த்தலைவர் இலங்கைப் பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிருர். உள்நாட்டுப்பிரச்சனை என்று ஒதுங்கி இராமல், தமிழர்களின் துயர் துடைத்து அவர்தம் சட்டரீதியான உரிமைகளைப் பாதுகாக்க இந்திய அரசினரும், தமிழக அரசும் தம்மாலியன்ற உதவிகளைச் செய்ய வேண்டும்.

## வெளிநாடுகளில் இந்துமத ஆலயங்கள்

அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற மேற்கத்திய நாடுகளில் பணிபுரிகின்ற தொழில் செய்கின்ற இந்தியர்கள் வழிபாடு செய்வதற்கென்றே பற்பல இந்து ஆலயங்கள் லண்டன், நியூயார்க் போன்ற பெருநகரங்களில் நிறுவப்பட்டன. மேற்கத்திய நாடுகளின் கண்மூடித்தனமான விஞ்ஞானப் பெருக்கமும், பொருள் முன்னேற்றமும் வாழ்க்கையில் ஒருவிதமான சலிப்பை உண்டுபண்ணியிருப்பதால் வெளிநாட்டவரும் இந்து மதக் கொள்கையின்பால் தங்கள் கவனத்தைத் திருப்புகின்ற காலம் வந்து விட்டது. இதன் விளைவாகத்தான், பல்வேறு அமெரிக்க நகரங்களில் ஆலயங்கள் கட்டப்பெறுகின்றன. பிட்ஸ்பர்க் நகரில்தான் முதன்முதலாகத் திருவேங்கடவன் ஆலயம் நிறுவப் பெற்றது. பின்னரே நியூயார்க் நகரில் கணேசர் ஆலயம் கட்டப்பட்டது. கருங்கல்லில் சிலை செய்வதற்கென்றும், இந்த இரண்டு ஆலயங்களில் வேறு சில இன்றியமையாத செலவினங்களுக்கென்றும் திருப்பதி கோவில் அறங்காவல் குழுவினர் 21 லட்ச ரூபாய் நிதி உதவி அளித்துள்ளனர். இந்த இரண்டு ஆலயங்களின் சொத்து ஒரு கோடிக்கு மேல் இருக்கும் என்று மதிப்பிடப்படுகிறது.

டெக்ஸாஸ் மாநிலத்தில் ஒரு மீனாட்சி ஆலயம் நிறுவப்பட்டுள்ளது. ஸான்பிரான்ஸிஸ்கோ, வாப்பிங்கர் நீர்வீழ்ச்சி ஆகிய இடங்களிலும் சிவ ஆலயங்கள் கட்டப்படுகின்றன. கனடா, ஹவாய்' சிட்னி போன்ற இடங்களிலும் ஆலயங்கள் கட்டுவதற்குக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. லண்டனில் முருகனுக்கு ஆலயம் ஒன்று நிறுவப்படுவது மகிழ்ச்சியான செய்தியாகும்.

விஞ்ஞானம் மதக்கருத்துகளுக்கு நேர் எதிரானது. ஆயினும் பிட்ஸ்பர்க் ஆலயக்குழுவின் உதவித் தலைவர் டாக்டர் இராஜகோபால் அணுஉலைச் சாதனங்களை உற்பத்தி செய்யும் புகழ் வாய்ந்த நிறுவனத்தின் தலைவர். கதிரியக்க விஞ்ஞானியான டாக்டர் கே. சுப்பாராவ் நியூயார்க் கோவில் குழுவின் தலைவர். நியூயார்க் நகர ஆலயத்துக்கு ஆயிரக்கணக்கான அமெரிக்கரும் வந்து வழிபடுகின்றனர். பல்வேறு அமெரிக்க நகரங்களிலிருந்து இந்த ஆலயத்துக்குச் சென்று திரும்ப வாரந்தோறும் பேருந்துகள் விடப்படுகின்றன. எனவே இந்துமதக் கலாசாரத்தையும், பண்பாட்டையும் பரப்புதற்கு இக்கோவில்களை மையமாகக் கொண்டு பணிபுரியலாம் என்பது தெளிவாகிறது.

## தேவர் நினைவு அஞ்சல்தலை

தமிழகச் சட்ட மன்றத்தில் கேள்வி நேரத்தின்போது மின்துறை அமைச்சர் இராமச்சந்திரன் பதிலளிக்கும்போது இந்திய அரசினர் தேவர் நினைவாக அஞ்சல்தலை வெளியிடவேண்டும் என்ற கருத்தை மாநில அரசு மீண்டும் வலியுறுத்தும் என்று குறிப்பிட்டார். அஞ்சல் தலை வெளியிடும் பொறுப்பினை ஏற்றுள்ள இந்திய அரசின் குழுவினர், தேவர் நினைவு அஞ்சல்தலையை கி. பி. 2008 - ஆம் ஆண்டுதான் வெளியிடஇயலும் என்று கூறியுள்ளனர். சட்டம் அப்படித்தான் உள்ளது என்று விளக்கம் கூறப்படுகிறது. எதற்கெடுத்தாலும் சட்டத்தைப் புதுக்கியும், மாற்றியும், திருத்தியும் வெளியிடும் அரசினர், தேவர் நினைவு அஞ்சல்தலை வெளியிடுவதற்கும் ஏற்றவாறு சட்டத்தைத் திருத்தி உடனடியாக அஞ்சல்தலை வெளியிடுவதற்கேற்றவாறு மாநில அரசினர் செயற்படவேண்டும்.

## தமிழறிஞர்களுக்கு நிதி உதவி

தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலிருந்து தமிழ் அறிஞர்களைத் தெரிந்தெடுத்து அவர்களுக்கு 1978 ஏப்ரல் முதல் மூன்று ஆண்டுகளுக்கு திங்கள்தோறும் நூறு ரூபாய் வழங்கப்படும் என்ற திட்டத்தைத் தமிழக அரசினர் செயற்படுத்த உள்ளனர். இச் சீரிய திட்டத்தினால் பாராட்டப்பெறும் தமிழ் அறிஞர்களையும்,பாராட்டுகின்ற தமிழக அரசினரையும் வாழ்த்துகிறோம். இதுபற்றி எந்த மாற்றுக் கட்சியினரும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. இசைநாடகத் துறையில் வைஜயந்திமாலாவுக்கும், தமிழ்க்கவிதைக்கென்று கண்ணதாசனுக்கும் கொடுக்கப்படுகின்ற நிதி உதவியினையும், பாராட்டினையும் பற்பலர் எதிர்த்து விமர்சனம் செய்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தஞ்சை சரஸ்வதி மகால் நூலகம்

ஆங்கிலநாட்டில் வெளியிடப்படும் ஆங்கில மொழிக் கலைக்களஞ்சியத்திலும் (என்சைக்ளோபீடியா பிரிட்டானிகா) குறிக்கப்படுகின்ற வரலாற்றுப் புகழ் வாய்ந்தது தஞ்சையிலுள்ள சரஸ்வதி மகால் நூல் நிலையம் ஆகும். ஆங்கில நூல்களேயன்றி, தமிழ், தெலுங்கு, வடமொழி, மராத்தி, கன்னடம் ஆகிய மொழிகளில் உள்ள ஓலைச் சுவடிகளும் இந்த நூலகத்தில் பேணிக் காக்கப்படுவதோடன்றி, மொழி வல்லுநர்களைக் கொண்டு தொடர்ந்து புதிய

நூல்களும் வெளியிடப்படுகின்றன. மாநில அரசினர் ஏறத்தாழ இந்நூலகத்துக்கு ஒரு லட்சம் ரூபாய்க்குமேல் நிதி உதவி அளித்து வருகின்றனர். இந்திய அரசினரும் மூன்று லட்சம் நிதி உதவி அளித்துள்ளனர். இந்த உதவி வடமொழி நூல்கள் வெளியிடுவதற்கு மட்டும்தான் என்று கூறப்படுகிறது. தற்போது இந்நூலகத்தின் செயலாளராகப் பணிபுரிகின்ற தமிழ்ப் பெருமகனார் புலவர். வடிவேலனார் அவர்கள்—தம் சீரிய தொண்டின் மூலம் நூலகத்தினைத் திறம்பட வளர்த்து வருகிறார்.

## தமிழில் பொறி இயற் கல்வி

சென்னைப் பல்கலைக் கழகத்தினரால் பாடமொழிபற்றிப் பரிந்துரை செய்ய நியமிக்கப்பட்ட ஒருகுழுவினர் வரும் கல்வியாண்டிலிருந்து (1979 - 1980) பொறிஇயல் கல்லூரிகளும் தமிழைப்பாடமொழியாக்க வேண்டும் என்று கூறியுள்ளனர். தன்னாட்சிக்கல்லூரிகளும் பல்வேறு பாடங்களைத் தமிழில் போதிப்பதற்கு வேண்டிய நன்முயற்சிகளை எடுத்தல் வேண்டும் என்று இந்தக் குழுவினர் கேட்டுக் கொண்டுள்ளனர். முதுகலைப் பட்ட வகுப்புகளில் தற்போது வரலாற்றுப்பாடம் மட்டும் தமிழில் போதிக்கப்படுகிறது. பொருளாதாரம், கணிதம். தத்துவம், தாவரஇயல், விலங்கியல் ஆகிய பல்வேறு பாடங்களையும் தமிழில் போதிக்க ஏற்பாடுகள் செய்யவேண்டும் என்று இக்குழு பல்கலைக்கழகத்தினருக்குப் பரிந்துரை செய்கிறது. இத்துறையில், பாடங்களையும் நூல்களையும் தமிழில் எழுதுவதற்கென்றே நியமிக்கப்பட்ட தமிழக அரசின் பாடநூற் குழுவினர் வெளியிட்ட பற்பல நூல்கள் முழுப்பாடப்பகுதியினையும் உள்ளடக்கவில்லை. எனவே இனி ஒவ்வொரு துறைக்கென்றும் நிபுணர் குழு நியமிக்கப்படவேண்டும் என்பதும் ஒரு வேண்டுகோளாகும். அண்மையில் உள்ள இலங்கை நாட்டில் மருத்துவம், விலங்குமருத்துவக் கல்வி, பொறிஇயற்கல்வி ஆகிய அனைத்தும் தமிழில் நடத்தப்படுகின்றன. அங்கு வெளியிடப்பட்டுள்ள நூல்களைத் தருவித்து நம்மவர் பயன்பெறச்செய்வது நல்லது.

## அகில உலக இந்துமத மாநாடு

காசியும் கங்கையும், சரஸ்வதி என்ற நதியோடு கலக்கும் திரிவேணி சங்கமம் என்ற ஊருக்குத் தற்போதை பெயர் அலகாபாத். ஜனவரித் திங்கள் கடைசி வாரத்தில் அகில உலக இந்துமத மாநாடு வேதவியாசர் அரங்கில் தொடங்கி மூன்று நாட்கள் நடந்தது. திபெத்திலிருந்து வந்து அரசியல் புகலிடம் பெற்றிருக்கும் தலாய் லாமா

மாநாட்டினைத் துவக்கி வைத்தார். நமது நாட்டில் பல்வேறு பகுதிகளிலிருந்தும் அறுபதினாயிரத்துக்கு மேற்பட்டோர் வந்து குழுமியிருந்தனர். 22 வெளிநாடுகளிலிருந்து ஆயிரத்துக்கு மேற்பட்ட சிறப்பு விருந்தினர்களும் வந்திருந்தனர்.

இந்து மதத்தின் ஒருமைப்பாட்டினை உடைத்தெறியும் சாதி வேறுபாட்டினைக் களைந்தெறிய வேண்டும் என்ற கருத்தைப் பேஜாவர் மடத்து அதிபரான சுவாமி விசுவேச தீர்த்தர் வலியுறுத்தினர். இந்துக்கள் அனைவரும் மதத்தின் அடிப்படையில் ஒன்றுபட வேண்டும்; இல்லையாயின் பிற மதத்தினரின் சூதுக்கும் வாதுக்கும் உட்பட்டு அழிய நேரிடும் என்று பெரும்பாலான பேச்சாளர்கள் எச்சரிக்கை விடுத்தனர். இந்து மத ஆலய நிர்வாகம் மத நம்பிக்கை இல்லாதவர்கள் கையில் ஒப்படைக்கப்படக் கூடாது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பசுவதையினைத் தடைசெய்ய மறுக்கும் கேரளா, மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்கள் மீண்டும் தத்தம் கருத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

வள்ளுவர் விழா - சென்னையிலும் குமரியிலும்

தமிழக அரசின் சார்பில் சென்னையில் வள்ளுவர் கோட்டத்தில் வள்ளுவர்விழா ஜனவரித்திங்கள் 15-ஆம் நாளன்று சிறப்பாகக்கொண்டாடபபட்டது. தமிழக ஆளுநர் பட்வாரி விழாவினைத் துவக்கி உரையாற்றினர். ம. பொ. சிவஞானம் அவர்கள் தலைமையேற்றிருந்தார். அமைச்சர் காளிமுத்து தலைமையில் திருக்குறள் கருத்தரங்கம் அன்று மாலை நடைபெற்றது.

ஏப்ரல் திங்கள் 15-ஆம் நாளன்று கன்னியாகுமரியில் இந்தியப் பிரதமர் மொரார்ஜிதேசாய் தலைமையேற்றிருந்த விழாவில் மாநில முதலமைச்சர் எம். ஜி. ஆர். வள்ளுவர் நினைவாலயத்துக்கு அடிக்கல் நாட்டினர். விவேகாநந்தர் பாறைக்கு மிக அண்மையில் உள்ள பெரிய பாறையின் மேல் பன்னிரண்டடி உயரமுள்ள தாமரைமலர் ஒன்று கல்லால் அமைக்கப்படும். அதன்மீது முப்பத்தைந்து அடி உயரமான வள்ளுவர் சிலை அதன்மீது இருக்குமாறு பொருத்தி வைக்கப்படும். அறிவுக்கடலாம் வள்ளுவருக்கு ஆழ்கடலின் நடுவே சிலையமைக்கும் சீரிய பணியினைச் செய்யும் தமிழக அரசுக்கு நமது நல்வாழ்த்துகள்.

## STATEMENT ABOUT OWNERSHIP AND OTHER PARTICULARS


| | |
|---|---|
| Place of Publication : | MADURAI TAMIL SANGAM<br>54, Tamil Sangam Road<br>Madurai - 625001 |
| Periodicity of its Publication : | QUARTERLY |
| Printer's Name : | S. Singaram |
| Nationality : | Indian |
| Address : | 44-B, Venkatapathy Iyengar Street<br>Kamarajar Salai<br>Madurai - 625009 |
| Publisher's Name : | T. P. M. Periyaswami, M.L.A. |
| Nationality : | Indian |
| Address : | Madurai Tamil Sangam<br>54, Tamil Sangam Road<br>Madurai - 625001 |
| Editor's Name : | T. P. M. Periyaswami, M.L.A. |
| Nationality : | Indian |
| Address : | Madurai Tamil Sangam<br>54, Tamil Sangam Road<br>Madurai - 625001 |

I, T. P. M. Periyaswami, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

*(Sd.) T. P. M. PERIYASWAMI*
*Publisher*